Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபால் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ மார்கழி 24 ஆம் நாள் ஷஃபான் 1 (8-1-62) திங்கட்கிழமை இதழ் 280

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழ வேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

## 4 எம்.பி.க்கள் மீது வழக்கு

# கொழும்பில்தான் இனி விசாரணை

யாழ்ப்பாணம், திங்கள்

**தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நான்கு எம். பி.க்கள் மீதும் ஒரு வழக்கறிஞர் மீதும் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் யாழ்ப்பாணம் பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஆர். ஸி. டி' நீஸ்சினல் தொடரப்பட்ட வழக்கு கொழும்புக்கு மாற்றப்பட்டிருப்பதாக உத்தரவு கிடைத்துள்ளது. இவ் வழக்கு விசாரணைகள் கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெறும்.**

கொழும்பில் விசாரணை நடைபெறுவதாக பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகள் எதுவும் இதுவரை எதிரிகளுக்கு கிடைக்கவில்லை எனத் தெரிகிறது.

சென்ற பெப்ரவரி மாதம் 20-ம் திகதி சட்டவிரோதமாகக் கூடியதாகவும் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தாவையும் யாழ்ப்பாணம் பொலிஸ் அதிகாரி திரு. சி. ஆர். ஆண்டடையும் அவர்களது சட்டரீதியான கடமையைச் செய்யவிடாது தடுத்ததாகவும் திரு. ஏ. அமிர்தலிங்கம் எம் பி., டாக்டர் இ. எம். வி. நாகநாதன் எம். பி., திரு. வி. ஏ. கந்தையா எம். பி., திரு. வி. தருமலிங்கம் எம். பி ஆகியோர் மீதும் புரக்டர் திரு. எஸ். நடராசா மீதும் இவ் வழக்கில் ஏழு குற்றங்கள் சாட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த நவம்பர் மாதம் 21-ம் திகதி இவ் வழக்கு முதன் முதலாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இவர்கள் ஐவர் மீதும் சாட்டப்பட்டுள்ள ஏழு குற்றச்சாட்டுகளையும் மாஜிஸ்ரேட் வாசித்துக் காட்டியதும் எதிரிகள் மௌனமாக நின்றதும் வழக்கு விசாரணையை ஜனவரி 30-ம் திகதிக்கு ஒத்தி வைத்ததும் தெரிந்ததே!

## புகையிலையால் புற்றுநோய்!

புதுடில்லி, ஜன. 7

வெற்றிலையுடன் புகையிலையைச் சேர்த்து உபயோகிப்பதால் புற்றுநோய் உண்டாகும் என்று மேற்கு ஜெர்மன் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

## நேபாளத்தில் பர்மா பிரதமர்

காட்மாண்டு, ஜன. 7

பர்மியப் பிரதமர் யு. நூ இன்று நேப்பாளத்துக்குவந்து சேர்ந்தார். பிரதமர் யு. நூவை நேப்பாள மன்னர் மகேந்திரர் காட்மாண்டு விமான நிலையத்தில் வரவேற்ருர். "புத்த பிரான் தோன்றிய நாட்டில் சமாதானத் தூதுவராக யு நூவை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்" என்று மன்னர் மகேந்திரர் கூறினர்.

இதற்கு பிரதமர் யு. நூ. பதிலளிக்கையில் இருநாடுகளுக்குமிடையில் நெடுங்காலமாக விருந்துவரும் நேச உறவு பலப்படவும் உலக சமாதானம் வலுப்பெறவும் தமது விஜயம் உதவுமென்று நம்பிக்கை தெரிவித்தார்.

---

## 'பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயார்! ஆனால்...'

### ஐ. நா. தலைமைக் காரியதரிசிக்கு டாக்டர் சுகர்ணே விளக்கம்

### மேற்கு இரியானைச்சுற்றி படைகள் நிலைகொண்டுவிட்டன!

ஜாகர்த்தா, ஜன. 7

"மேற்கு இரியான் விஷயமாக நெதர்லன்ட்ஸ் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த இந்தோனேஷியா எப்பொழுதும் தயாராக இருக்கிறது. ஆனல் மேற்கு இரியானை இந்தோனேஷியாவுக்கு மாற்றிக் கொடுப்பது என்ற அடிப்படையில் தான் பேச்சுவார்த்தை நடைபெற முடியும்" என்று இந்தோனேஷிய ஜனதிபதி டாக்டர் சுகர்ணே ஐ. நா. வின் பதில் தலைமைக் காரியதரிசி யு. தாண்ட்டுக்குத் தெரிவித்துள்ளார்.

மேற்கு இரியானை இந்தோனேஷியாவின் ஒரு பகுதியாகக் கருதி அதற்கென இந்தோனேஷிய ஜனதிபதியால் நியமிக்கப்பட்ட கவர்னர் இப்பொழுது நெதர்லன்ட்சின் ஒரு பகுதியென நெதர்லன்ட் கூறிக்கொண்டுள்ள மேற்கு இரியான் பிரதேசத்திற்குள்போய்ச் சேர்ந்து விட்டார். இத் தகவலை டாக்டர் சுகர்ணேவே நேற்று கிழக்கு ஜாகர்த்தாவில் ஒரு பொதுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்தோனேஷிய ஆயுதப் படைகளும் ஏற்னெவே மேற்கு இரியான் பிரதேசத்தைநோக்கிப் போய்விட்டதாக இந்தோனேஷிய அதிகாரிகள் தெரிவித்தனர். மேற்கு இரியானைச் சுற்றி இந்தோனேஷியப் படைகள் நிலைகொண்டுவிட்டதாகஅதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இந்தோனேஷியா உடனடியாக பலாத்காரத்திலிறங்குமென்று தாம் கருதவில்லையென்று மேற்கு இரியானிலுள்ள டச்சுத் தளபதி தெரிவித்துள்ளார்.

## காரைநகர் லொறிக்கு கொட்டாஞ்சேனையில் விபத்து

### இருவர் மரணம்; மூவர் காயம்

கொழும்பு, ஞாயிறு

காரைநகரைச் சேர்ந்த திரு. மு. பாலசிங்கத்துக்குச் சொந்தமான ஒரு லொறி வெள்ளிக்கிழமை மாலை கொட்டாஞ்சேனையில் ஸ்கின்னர்ஸ்வீதி வடக்கு-ஜம்பட்டாவீதி சந்தியில் ஒரு வாடகைக் காருடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் ஸ்தலத்தில் மாண்டனர். லொறிச் சாரதியும், கிளீனரும், வாடகைக்கார் சாரதியும் பலத்த காயங்களுடன் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை பிற்பகல் சுமார் 4-30 மணியளவில் நடந்தது.

கொட்டாஞ்சேனையிலிருந்து ஸ்கின்னர்ஸ்வீதி வழியாக வந்துகொண்டிருந்த லொறி முதலில் ஒரு வாடகைக்காருடன்மோதி பின்னர் சந்தி மூலையிலுள்ள மாடிக்கட்டிடமான இரும்புக்கடையின் வாசலுக்குப் பாய்ந்தது.

கடையில் வர்ணம் பூசிக்கொண்டிருந்த ஒரு தொழிலாளி லொறிக்கும் சுவருக்குமிடையில் அகப்பட்டுநசுங்குண்டு ஸ்தலத்திலேயே மாண்டார் அச்சமயத்தில் அவ்வழியால் நடைபாதையில் சென்றுகொண்டிருந்த ஒரு சிறுமியும்லொறியில் சிக்கி மாண்டார்.

## தொழில் இலாகாவிலிருந்து மறைந்த 'டைப்ரைட்டர்கள்'

### 'டியூட்டரி'யிலும் விறகு டிப்போவிலும் இருந்தன

கொழும்பு, ஞாயிறு

தொழில் இலாகாவின் ஊழியர்கள் சேமலாப நிதிக் காரியாலயத்திலிருந்து சென்ற நவம்பர்மாதம் காணமற்போன 8 டைப்ரைட்டர்களில் ஆறு ஒரு 'டியூட்டரி'யில் இருக்கக் காணப்பட்டது. விறகு டிப்போ ஒன்றில் மற்றெரு டைப்ரைட்டரைப் பொலிசார் கண்டு பிடித்தனர்.

இதுசம்பந்தமாக டப்ளியூ பொட்டேஜு, ஆர். ஏ. சோமபால, எச். ஜி. சிரிசேன ஆகியோர் கூட்டு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டனர். வழக்கு ஜனவரி 10ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## கைத்தறியாளருக்கு பிராவிடன்ட் நிதி

சென்னை, ஜன. 7

தமிழ் நாட்டில் கைத்தறி நெசவாளர்களுக்கு பிராவிடன்ட் நிதித்திட்டம் கொண்டு வரப்பட இருக்கிறதென்று கைத்தறி நெசவாளர் கூட்டுறவு இயக்கக் காரியதரிசி திரு. நாச்சிமுத்து தெரிவித்தார்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டில் கைத்தறி அபிவிருத்திக்கென அரசாங்கம் 8 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

## "ஆசிரியர்களையும் ஆலோசியுங்கள்!"

### சங்கக் காரியதரிசிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

பாடசாலைகளை தேசியக்கல்வி முறையின்புதிதாகத்தொகுத்து அமைக்க எடுக்கப்படும் முயற்சிகளில் ஆசிரியர்களைக் கலந்தாலோசியாது நிர்வாகிகள் மட்டும் இதுபற்றி முடிவுக்கு வருதல் மிகவும் வருத்தத்துக்குரியதென்றும் இறுதிமுடிவுக்கு வருமுன்னர் ஆசிரிய சங்கங்களுடன் இதுசம்பந்தமாகக் கலந்தாலோசிக்குமாறும் வடமாகாண ஆசிரியர்சங்கக் காரியதரிசியும் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கக் காரியதரிசியும், கல்விப் பகுதியினருக்கும் இதர ஆசிரியசங்கங்களுக்கும் அரசியல்கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பியுள்ள கடிதமொன்றில் கோரியுள்ளனர்.

## புதிய நேரசூசிகை

இ. ... பாண... சனைக்... களுக்... முறை... கும் பு... சனைக்... களின் ... வதற்க... படி ... பட்டிரு...

யாழ் ... நேரசூ... கருக்க... சனைக்... திரு. ... புதிய ...மாற்றங்களமுன்னேற்றப் பாதையில் செல்ல வகை செய்யும் எனத் தெரிவித்தார்.

---

## பெண் கல்வி அபிவிருத்தி

### கமிட்டி நியமனம்

சென்னை, ஜன. 7

தமிழ்நாட்டில் பெண் கல்வி அபிவிருத்திக்கென ஆலோசனை கூறுவதற்கென்று7 பேர் கொண்ட கமிட்டியொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

# "இரு மொழிகளிலும் 'ஸ்ரீ' யின் ஒலிவடிவம் ஒன்றே"

— முடிக்குரிய சாட்சி

## ஸ்ரீ" வழக்கில் வழக்கறிஞர் திருச்செல்வம் குறுக்குவிசாரணை

### எதிரிதரப்பில்ஒன்பதுவழக்கறிஞர்கள் ஆஜரானர்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"மோட்டார் இலக்கத் தகடுகளில் 'ஸ்ரீ' எழுத்தை சிங்களத்தில் எழுதினுலும் சரி தமிழில் எழுதினுலும்சரி ஒலிவடிவம் ஒரேமாதிரியாகவே அமையும். எம்மொழியில் 'ஸ்ரீ' எழுதப்பட்டிருந்தாலும் தொடர் இலக்கத்தை அடையாளம் கண்டு கொள்ள முடியும்" என கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நடைபெற்ற 'ஸ்ரீ' வழக்கு விசாரணையில், முடிக்குரிய தரப்பில் சாட்சியமளித்த மோட்டார் வாகன பதிவு உத்தியோகத்தர் காரியாலயத்தைச் சேர்ந்தகுமாஸ்தாவான திரு. எஸ். பொன்னுத்துரை எதிரிதரப்பு பிரதம வழக்கறிஞர் திரு. எம். திருச்செல்வம் கியூ. ஸி. யினுல் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது தெரிவித்தார்.

மோட்டார் வாகனத்தின் இலக்கத் தகட்டில் உள்ள எழுத்தை மாற்றியதாகக் குற்றஞ்சாட்டி பருத்தித்துறை பார்லிமேண்ட் அங்கத்தவர் திரு.கே. துரைரத்தினத்தின் கார் சாரதியான திரு. கந்தசாமி வேலும் மயிலும்மீது குற்றஞ்சாட்டி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சைமன் பீட்டரினுல் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட்கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரியின் சார்பில் பிரபல வழக்கறிஞர் அறுவர் மூன்று புரக்டர்களின் அனுசரணையுடன் ஆஜராயிருந்தனர்.

முடிக்குரிய தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ரஞ்சித் அபயசூரியா ஆஜராயிருந்தார்.

எதிரியின் சார்பில் திரு. எம்.திருச்செல்வம்,கியூ.ஸி. திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், ஏ. அமிர்தலிங்கம், டி. கணேசலிங்கம், கே. வி. எஸ். சண்முகநாதன், எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோரின் உதவியுடன் திருவாளர்கள் எஸ். நடராசா, ஆர். விசுவநாதன், வி. நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர்.

1951-ம் ஆண்டின் 14-ம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 24-வது விதியின் 2-ம் பிரிவுக்கு மாருக மோட்டார் வாகனத்தின் அடையாள இலக்கத் தகட்டில் புரியாதபடி மாற்றஞ்செய்ததாக திரு. கந்தசாமி வேலும்மயிலும்மீதும் வேறு ஆறுபேர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

முடிக்குரிய தரப்பு முதல் சாட்சியான பொலிஸ் இன்ஸ்பெக்டர் சைமன் பீட்டர் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அணித்தாய் 2 ஸ்ரீ 1577 இலக்கமுடைய 'பேர்ஜோ' மோட்டார் வாகனத்தை மாலை 5-30 மணிக்கு கிற்பாட்டினேன். என்னுடன் சார்ஜண்ட் குணரத்தினமும், கான்ஸ்டபிள் பெரேராவும் நின்றனர். அந்தக் காரின் இலக்கத் தகடு புரியாதபடி இருந்ததைக் கண்டேன். வேறு மோட்டார் வாகனங்களில் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இலக்கத் தகடுகள் இருபபதை இதற்கு முன்னர் நான் பார்த்திருக்கிறேன். குறிப்பிட்ட இந்த வாகனத்தில் ஆங்கிலத்திலோ அன்றி சிங்களத்திலோ எழுத்துக்கள் இருப்பதை நான் காணவில்லை. எதிரி மாத்திரம் அந்தக் காரினுள் இருந்தார். அடையாளத் தகட்டை நான் பரிசோதனை செய்தேன். 5"×6" தகட்டில் மை பூசப்பட்டு 2க்கும் 1577க்குமிடையில் புரியாதபடி ஏதோ எழுதப்பட்டிருந்தது. காரின் இருபக்க இலக்கத் தகடுகளிலும் இவ்வாறே இருந்தது.

எதிரிதரப்பு பிரதம வழக்கறிஞர் திரு. எம். திருச்செல்வத்தின் குறுக்கு விசாரணைக்குப் பதிலளிக்கையில் இன்ஸ்பெக்டர் பீட்டர் பின்கண்டவாறு தெரிவித்தார்:

மற்றைய கார்களுடன் இந்தக் காரையும் நீண்ட நாட்களுக்கு காவலில் வைத்திருந்தேன். நீதிமன்ற உத்தரவின் பின்பே அவற்றை எடுத்துச் செல்ல அனுமதித்தேன். இந்த மோட்டார் கார்களின் சொந்தக்காரர்களினுல் கார்களைக் களவாடியதாக என் மீது தொடரப்பட்ட வழக்கின் பெறுபேருகவே நீதிமன்றம் அவ்வாறு எனக்கு உத்தரவிட்டது. கார்களைக் காவலில் தடுத்து வைத்திருக்க எனக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. ஆனுல் புரியாதபடி இருந்த இலக்கத்தகட்டைப் புகைப்படமெடுக்கவே அவ்வாறு செய்தேன்.

#### அரசியல் நோக்கம் எதுவும் இல்லை

சத்தியாக்கிரக இயக்கத்தின் போதுதான் இந்தக் கார்களை காவலில் வைத்திருந்தேனென்றாலும் அதற்கு எதுவித அரசியல் நோக்கமும் இருக்கவில்லை இதற்குமுன் இப்படியான கார்கள்மீது நான் வழக்குகள் தொடர்ந்திருக்கவில்லை. இலக்கத்தகடு புரியாதபடி இருப்பது வாகனக்குற்றம்என்பதை பின்புதான் அறிந்தேன்.

வழக்கறிஞர்: உமக்கு சிங்களம் நன்ருகத் தெரியுமா?

இன்ஸ்பெக்டர்: எஸ். எஸ். ஸி. பரீட்சைக்கு ஒரு பாடமாகப் படித்தேன்.

வழக்: சிங்கள பாஷையில் எத்தனை எழுத்துக்கள் உண்டு என்பதை சொல்ல முடியுமா?

இன்: எனக்குத் தெரியாது ஐயா!

மாஜிஸ்ரேட்: திரு. திருச்செல்வம், தமிழ்ப்பாஷையில் எத்தனை எழுத்துக்கள் உண்டென்பதை உங்களால் சொல்ல முடியுமா?

வழக்: இல்லை ஐயா. நான் எனது பாடசாலை நாட்களில் தமிழ்ப் பாஷையைப் படித்திருக்கவில்லை. அதனுல் அதனை அறியாமலிருக்கிறேன்.

வழக்கறிஞர் சிவசிதம்பரம்: 247 எழுத்துக்கள் ஐயா!

வழக்கறிஞர் திரு. திருச்செல்வத்தின் இன்னேர் கேள்விக்குப் பதிலளிக்கையில், அந்த இலக்கத் தகட்டில் எழுதப்பட்டிருந்தது தமிழ் ஸ்ரீ என்பதை தான் அறியாமல் இருந்தாலும் அதில் மாற்றஞ் செய்யப்பட்டிருக்கிறதென்பது தனக்குத் தெரியுமென்று இன்ஸ்பெக்டர் பீடர் தெரிவித்தார்.

பொலிஸ் பகுதியைச் சேர்ந்த புகைப் படப் பிடிப்பாளரான பி. ஈ. பெரேரா குறுக்கு விசாரணைக்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:

2 ஸ்ரீ 1577 இலக்கமுடைய மோட்டாரின் இருபக்க இலக்கத் தகடுகளையும் நான் புகைப்படம் பிடித்தேன். இது பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. எப்பொழுதும் தேவைக்கு உபயோகிக்க ஆயத்தமாக என்னிடம் ஓர் புகைப்படக் கருவி இருக்கிறது. காலதாமதம் எதுவும் இன்றி நான் புகைப்படங்கள் எடுக்கிறேன்.

#### குமாஸ்தாவின் சாட்சியம்

வாகனப் பதிவு காரியஸ்தர் காரியாலயத்தைச் சேர்ந்த குமாஸ்தாவான திரு. எஸ். பொன்னுத்துரை அடுத்ததாகச் சாட்சியமளிக்கையில்குறிப்பிட்ட அந்த மோட்டார்காரின் பதிவு இலக்கம் 2 சிங்கள ஸ்ரீ 1577 எனத் தெரிவித்தார்.

வழக்: 'ஸ்ரீ' என்று சொல்லாமல் 'சிங்கள ஸ்ரீ' என்பதற்கு என்ன காரணம்?

சாட்சி: சிங்கள எழுத்தினுல் 'ஸ்ரீ' எழுதப்பட்டிருப்பதால் 'சிங்கள ஸ்ரீ' என இருக்கிறது.

வழக்: தமிழில் 'ஸ்ரீ' இருக்கிறதா இல்லையா?

சாட்சி: தமிழிலும் 'ஸ்ரீ' உண்டு.

வழக்: நீர் சிங்களம் படித்திருககிறீரா?

சாட்சி: இல்லை.

வழக்: 'சிங்கள ஸ்ரீ' என்பதை எப்படிக் கண்டுகொள்வீர்?

சாட்சி: சிங்களத்தில் இதுதான் 'ஸ்ரீ' என்பது எமது இலாகாவினுல் சொல்லித்தரப்பட்டுள்ளது. பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

வழக்கறிஞரின் இன்னேர் கேளவிக்குப் பதிலளிக்கையில் மோட்டார் இலக்கத் தகடுகளில் 'ஸ்ரீ' எழுத்தை சிங்களத்தில் எழுதினுலும் சரி தமிழில் எழுதினுலும் சரி ஒலி வடிவம ஒரே மாதிரியாகவே அமையுமென்றும் எம் மொழியில் 'ஸ்ரீ' எழுதப்பட்டிருந்தாலும் தொடர் இலக்கத்தை அடையாளங் கண்டு கொள்ள முடியுமென்றும் திரு. பொன்னுத்துரை உறுதிப்படுத்தினுர்.

இந் நிலையில் மேல் விசாரணை இம்மாதம் 27ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.




### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் சிரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணுநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


### தமிழ்ப்பிள்ளைகளையும் அனுமதியுங்கள்

பதுளை, ஞாயிறு

பதுளை தர்மதூதக் கல்லூரியில் தமிழ், இந்து மாணவர்களை அனுமதிக்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டதன் பேரில் பதுளை சைவபரிபாலன சங்கத்தின் நிர்வாகக் கமிட்டியினர் கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளனர்.

நீதியீனமாக தமிழ்ப்பிள்ளைகள்மேல் இவ்வித பாரபட்சம் காட்டப்படுவது அரசாங்க ஒழுங்கு விதிகளுக்கு மாருனதெனவும் அரசாங்கம் இதில் உடனடியாகத் தலையிட்டு நீதியை நிலைநாட்டவேண்டுமெனவும், இக்கமிட்டியினர் பிரதம மந்திரி, கல்வி மந்திரி, வித்தியாதிபதி முதலியோருக்கு வேண்டுகோள் செய்திருக்கின்றனர்.

### கணிப்பு எடுக்க விமானங்கள்

லண்டன், ஜன. 7

பிரிட்டனின் தூரகிழக்கு விமானப்படையின் அறுபதாம் இலக்கப் பிரிவைச் சேர்ந்த விமானியொருவரும், விமான வல்காட்டியும், தென்கிழக்காசியாவில் ஏற்படும் உயர்தர கதிரியக்க வீழ்ச்சியைக் கவனிப்பதற்கு வேண்டிய செய்திகளைச் சேகரிப்பதற்கு உதவுகின்றனர். இவ்விமானப்படை சிங்கப்பூர், டென்காவிலுள்ளது.

---

இதே குற்றச் சாட்டின் மேல் வழக்குத் தொடரப்பட்டிருந்த திருவாளர்கள் ஈ. மகாதேவன், வி. சின்னப்பு, ஏ. சகாதேவன், எஸ். ஞானசுந்தரம், கே. நடராசா, டி. துரைச்சாமி ஆகியோரையும் அதே தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி மாஜிஸ்ரேட் உத்தரவிட்டார்

## வங்கி ஊழியர் தகராறு

### அடுத்தவாரம் தொழில் நீதிமன்றம் ஆராயும்

கொழும்பு, ஞாயிறு

வங்கி ஊழியர் தகராறு சம்பந்தமாய் நியமிக்கப்பட்ட கைத்தொழில் நீதிமன்றம், தன் விசாரணையை அடுத்த வாரம் ஆரம்பிக்கலாமென நீதிமன்றத் தலைவர் திரு. எஸ். பி. யட்டவாரா கூறினுர்.

கீழ்க்கண்ட விஷயங்கள்பற்றி கோர்ட் தீர்ப்பளிக்குமாறு கோரப்பட்டுள்ளது:

வர்த்தக வங்கிகள் சங்கம், இலங்கைவங்கி ஆகியவற்றுக்கு வங்கி ஊழியர்கள் சமர்ப்பித்த திட்டப்படி 1960ம் ஆண்டு ஏப்ரல் முதல் திகதி முதல் வங்கி ஊழியர்களின் சம்பளத் திட்டம் பரிசீலனைசெய்யப்படவேண்டுமா?

பென்ஷனுடன் வாழ்க்கைப்படி வழங்கவேண்டுமா?

ஏற்கெனவே அமுலிலிருப்பதற்கு மேலாக 7 நாள் அதிக விடுமுறை, வங்கி ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டுமா?

ஓய்வு பெறுவதற்கு முன் 3 மாத விடுமுறை அவர்களுக்கு வழங்கப்படவேண்டுமா?


## குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற

குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:

குனேகா அடையார், மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ,

குருதெனியா.

கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:

செல்வாஸ் (SELVAS)

(பிரபல ஜவுளித் தினிசு விற்பனையாளர்கள்)

31, செட்டியார் தெரு, கொழும்பு.

யாழ்ப்பாண விற்பனையாளர்:

தமிழ்ப் பண்ணை, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# “உலகமே மாறினுலும் போர்த்துக்கல் இனி கோவாவுக்கு வரமுடியாது”

## காங்கிரஸ் மகாநாட்டில் பிரதமர் நேரு எச்சரிக்கை

பாட்னு,ஜன. 7

**“உலகம் முழுவதுமே மாறினுலும் சரி. இந்தியாவில் போர்த்துக்கல் ஆதிக்கம் மீண்டும் வர முடியாது” என பிரதம மந்திரி திரு. நேரு நேற்று பாட்னுவில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸின் 67வது மகாநாட்டில் சர்வதேச விவகாரம் பற்றிய தீர்மானம் ஒன்றின் போது பேசுகையில் குறிப்பிட்டார்.**

பாட்னுவில் நடைபெற்ற இந்தியதேசிய காங்கிரஸின் 67வது மகாநாடு நேற்று முடிவடைந்தது. அதற்கு முன்னதாக யோசனைக் கமிட்டி இயற்றிய 3 தீர்மானங்களை மகாநாடு ஏற்றுக்கொண்டது. கோவா பற்றிய ஒரு தீர்மானமும், சர்வதேச விவகாரம் பற்றிய தீர்மானமும், காங்கிரஸின் தேர்தல் அறிக்கை பற்றிய தீர்மானமுமே அவைகள்.

நேருஜி தொடர்ந்து கூறியதாவது:-

“கோவாவைத் திரும்பப் பிடிக்கப் போவதாய் போர்த்துக்கல் பிரதமர் சலஸார் அறிவித்ததனுல் மேற்கு நாடுகளுக்கு சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் வல்லரசுகள் உதவி புரியுமானுல் அவைகளே பெரும் சிக்கலில் மாட்டிக் கொள்ளும். உலகையே இது குழப்பத்தில் ஆழ்த்தி விடும்.

கோவாவில் ராணுவ நடவடிக்கை எடுத்ததினுல் ஐ. நா. ஸ்தாபனமே சீர்குலைந்து விட்டதாய்ச் சிலர் கூச்சல் போடுவது வியப்பாய் இருக்கிறது. காங்கோவில் ஐ. நா.வுக்கு ஆபத்து ஏற்பட்டபோது பெரிய நாடுகள் அதற்கு உதவி செய்ய முன்வரவில்லை. சில நாடுகள் ஐ. நா.வுக்கு முட்டுக் கட்டையும் இட்டன. நெருக்கடியான சமயததில் காங்கோவில் ஐ. நா.வுக்கு பாரதம்தான் உதவி புரிந்தது.

திரு. ஹமர்ஷீல்ட் மரணமடைவதற்கு முன் அவர் எழுதிய பல கடிதங்களில் ஐ. நா.வைப் பாதுகாக்க இந்தியா செய்துவரும் முயற்சிகளை வெகுவாகப் பாராட்டியிருக்கிருர். திரு. ஹமர்ஷீல்டின் கடிதங்கள் வெளியாகும்போது உண்மை தெரியவரும்.

காங்கோ நிலைமை விபரீதமாய் இருந்த சமயம் நாம் துருப்புகளை அனுப்பாதிருந்தால் அங்கு ஐ. நா. சீர்குலைந்திருக்கும். நமது துருப்புக்களே அங்கு முன்னேடியாய் இருக்கிருர்கள்”.

திரு. கிருஷ்ண மேனன் பேசுகையில் கூறியதாவது:

“வடக்கு எல்லை பற்றி இந்தியாவின் கொள்கை உறுதியானது; சந்தேகத்திற்கு இடமில்லாதது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். நமது துருப்புக்கள் காங்கோவில் சமாதானத்தை நிலைநாட்டவே போயிருக்கிருர்கள். காங்கோ சம்பந்தமாக பெல்ஜியம் அனுஷ்டித்து வரும் கொள்கைகள் கண்டிககத் தக்கவை.

காஷ்மீரில் பாகிஸ்தான் இருப்பதற்கு எவ்வித உரிமையும் கிடையாது. பிரிட்டனுடன் உள்ள ஒப்பந்தப்படியும் சரி, ஐ. நா. தீர்மானப்படியும் சரி காஷ்மீர் முழுதும் இந்தியாவையே சேர்ந்தது”.

## தி. மு. க. தொடர்ந்து போராடும்

சென்னை, ஜன. 7

தனித் தமிழ்நாடு அமைக்க திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து போராடும் என்ற ஒரு திர்மானத்தை கழகம் நிறைவேற்றியுள்ளது.

## வெம்பிளி ஸ்டேடியம்

லண்டன், ஜன 5

லண்டனிலிருக்கும் உலகப் புகழ்பெற்ற வெம்பிளி ஸ்டேடியம், சுமார் 500,000 பவுண்டுகள் செலவில் திருத்தப்படவிருக்கிறது. பல சர்வதேச விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறும் இடமிது.

கிட்டத்தட்ட 100,000 பார்வையாளருக்கு இது நிழல் பொருந்திய இருக்கைகளும், பொதுமக்களுக்குக் கூடிய வசதிகள் நிறைந்த இடத்தைக் கொடுப்பதுமே இம்முன்னேற்றங்களாகும்.

காற்பந்தாட்டச்சபை, பிரிட்டிஷ் பரிசுக்கிண்ணப் போட்டியையும், மற்றும் பெரியபோட்டிகளையும், வரும் 21 வருடங்களுக்கு நடத்த ஒழுங்குசெய்திருக்கின்றது. ஸ்டேடியத்தின் புதிய கூரை அலுமினியத்தால் அமைக்கப்பட்டிருக்கும். அதன் உட்பாகம் கண்ணுடி நூலிழையால் ஆக்கப்பட்ட தட்டுகளால் இணைக்கப்பட்டு கூடிய பிரகாசத்தைக்கொடுக்கும்.

உலகிலேயே 100,000 பொது மக்களுக்குக் கூடிய வசதிகள் கிடைக்கும் ஒரேயொரு ஸ்டேடியம் இதுதான் என அதிகாரிகள் கருதுகின்றனர்.

## ஆஸ்திரேலியா வாங்கும் பிரிட்டிஷ் வானெலி

லண்டன், ஜனவரி 6

உயர்ந்த தரத்தைச் சேர்ந்த அடிக்கடி வானெலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிக்கொண்டிருக்கும் இரு வானெலி சாதனங்களை, “கவுன்ரியின் மிஸேஸ் பிரதம மின்சார கம்பெனி லிமிடெட்” ஆஸ்திரேலிய தபால் காரியாலயத்துக்கு அளிக்கவிருக்கின்றது. ஒரு வானெலி சாதனம் 138 மைல் தூரமுள்ள சிட்னிக்கும், ஒரேன்ஜ். நியூ சவுத் வேல்ஸுக்குமிடையிலும், மற்ற சாதனம் 82 மைல் தூரமுள்ள பிரிஸ்பேனுக்கும் மவுன்ட் மதங்ஸன், குயீன்ஸிலண்டுக்குமிடையிலும் உபயோகிக்கப்படும்,

ஸிட்னி—ஒரேன்ஜ சாதனம் தொலைபேசி தொடர்பையும் விநியோகிப்பதற்காக இணைக்கப்படும். பிரிஸ்பேன் மவுன்ட் மதங்ஸன் வானெலி ஒரு டெலிவிஷன் தொடர்பையே அளிக்கும்.

ஒவ்வொரு வானெலியும் 960 டெலிவிஷன் நிகழ்ச்சிகளை அல்லது பேச்சுரைகளை எடுத்துச்செல்லும்.

## “மனப்பால் குடிக்க வேண்டாம்”

—நேரு

புதுடில்லி, ஜன. 7

“பாரதம் ஒருபோதும் காஷ்மீரை விட்டுக்கொடுக்காது. பாகிஸ்தான் இவ்விஷயமாக மனப்பால் குடிததால் அது ஏமாற்றத்திலேயே முடியும்” என திரு. நேரு பாகிஸ்தான் அதிபரின் சமீபத்திய பேச்சு பற்றிக் குறிப்பிடுகையில் தெரிவித்தார்.

## “மே. இரியான் விடுதலைக்கு ஐ. நா. உதவியை நாடோம்”

### டாக்டர் சுகர்னே அறிவிப்பு

ஜாகர்த்தா, ஜன. 7

மேற்கு இரியானை விடுவிக்கும் முயற்சியில் இந்தோனேஷியா ஐ. நா வின் உதவியை நாடாது என ஜனுதிபதி சுகர்னே கூறினுர்.

இந்தோனேஷியா இவ்விஷயத்தில் தம் சொந்த பலத்தையே நம்பியிருப்பதாயும் அவர் தெரிவித்தார். இதற்கிடையில் விடுதலை நடவடிக்கைப் பகுதியில் வெளி விமானங்கள் எதுவும் வரக்கூடாதென எச்சரிக்கப்பட்டிருக்கிறது. கடற்படை அதிகாரிகளும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்கு நியூகினி மீது இந்தோனேஷியாவுக்குள்ள உரிமையை ஹாலந்து அங்கீகரித்தால்தான் சமரசப் பேச்சு சாத்தியம் எனவும் டாக்டர் சுகர்னே அறிவித்தார்.

வடரொடீஷியா

## கண்காணிப்பு முயற்சியில் ஐ. நா. வுக்கு ஏற்பட்டதோல்வி

### பாதுகாப்பு சபைக்கு யு. தாண்ட் அறிவிப்பார்

நியூயோர்க், ஜன. 7

கடாங்கா விஷயமாக வடரொடீஷியா, அங்கோலா எல்லைகளில் ஐ. நா. கண் காணிப்பை ஏற்படுத்தத் தாம் எடுத்த முயற்சிகள் வெற்றி பெருதது குறித்து தலைமைக் காரியதரிசி திரு. யுதாண்ட் வருகிற செவ்வாய்க்கிழமை பாதுகாப்பு சபைக்குத் தெரிவிப்பார்,

இதற்கிடையில் கடாங்காவில் காணுமற்போன இந்திய மேஜர் அஜித்சிங்கைக் கண்டுபிடிப்பதாக திரு. ஷோம்பே உறுதி கூறியிருப்பினும் அஜித்சிங் உயிருடன் இருக்கிருரா என்பதே சந்தேகமாய் இருக்கிறதென்று கடாங்காவிலுள்ள ஐ. நா. படைத தலைவர் பிரிகேடியர் ராஜா கூறினுர்.

## வாதரோக ஆராய்ச்சி நிலையம்

லண்டன், ஜன 7

முதல் சர்வதேச வாதரோக கலை ஆராய்ச்சி நிலையமொன்று லண்டனில் அமைக்கப்படும். உலகிலுள்ள வாதரோக ஊழியர்கள் யாபேரும் இதன் வசதிகளை உபயோகமாக்குவதற்கு அழைக்கப்படுவர்.

இக்கட்டிடம் கட்டுவதற்கும், அதற்கான சாதனங்களின் செலவுகளுக்கும் ஏறக்குறைய 100,000 பவுண்கள் பிடிக்குமாம்.

## தென்னைமரத்தை தாக்கும் வண்டுகள்

### ஒழித்துக்கட்ட புதியமுறை கண்டுபிடிப்பு

லண்டன், ஞாயிறு

பிரிட்டிஷ் விவசாய நிபுணர்கள் தென்னைமரத்தைப் பாதுகாக்கும் புதிய முறையைக் கண்டுபிடித்துள்ளனர்.

வண்டுகள், தென்னைமர உற்பத்தியாளர்களுக்கு பல தொல்லைகளும், செலவும் அளித்து வந்தன. வழமையாகச் செய்து வந்த சிகிச்சையொன்றும் வெற்றிதரவில்லை.

இதற்கான புதிய முறை, ஸீச்சீலிஸ் தீவிலுள்ள தென்னை மரங்களில் பரிசோதனை நடத்தப்பட்டது. இத்தேசம் இதனுல்தான் கூடிய வருமானத்தைப் பெறுகின்றது.

வண்டுகள் மரங்களின் அடியில் துளைத்துக்கொண்டு உள் சென்றுவிடும். கண்ணுக்குத் தெரியாத பூச்சிகளும், கிருமிகளும் உள்ளுக்கிருக்கும்வேரை பழுதடையப்பண்ணி மரங்களை வீழ்த்திவிடுகின்றன.

வண்டு, புழுக்களை தடுக்கும் பழைய சிகிச்சை முறைப்படி ஒருவித தூளொன்றைத் தூவியும் வெற்றிதரவில்லை. ஸீச்சீலிஸ்வில் 77 வீகித தென்னை மரங்கள் பாழடைந்தபோது இம்முறை உபயோகிக்கப்பட்டு இது திருப்தியை அளிக்கவில்லையென்று ‘புதிய விஞ்ஞானி’ சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## முட்டைகள் கெடாமலிருக்க புதியமுறை

லண்டன், ஜன. 7

முட்டைத் தூளை வர்த்தகதுறையில் ஈடுபடுத்துவதற்கு புதிய முறையை பிரிட்டிஷ் முட்டை பண்டகசாலை சபையின் ஆராய்ச்சி விஞ்ஞானிகள் விருத்தி செய்துள்ளனர்.

“இத்துறையில் நாம் துரிதமாக முன்னேறிவருகின்றேம். இது பின் மிகப் பிரமாதமானதாகவும் இருக்கும்” என சபையின் உபதலைவர் திரு. ஸி. ஜே. ஹரிஸன் கூறினுர்.

இப்புதிய முட்டைத் தூளின் விபரம் 1960-61ம் ஆண்டின் முட்டை பண்டகசாலை சபையின் வருடாந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டிருக்கின்றது. இத்தூள் வெப்பதட்பநாட்களின் நிலைமையின் உஷ்ணம், ஈடுத்தன்மை முதலியவற்றையும் தாங்கக்கூடியதும், நெடு நாட்களுக்கு சேகரித்து வைகக்கூடியதுமானதென்று அறிக்கையில தி மாக குறிப்பிடப்பட்டிருந்தது.

## பிரிவுபசாரம்

சில்லாலை, ஞாயிறு

சில்லாலை நெசவுநிலையத்தின் போதனுசிரியராகக் கடமையாற்றித் தற்பொழுது அச்செழு நெசவு நிலையததிற்கு மாற்றலாகியிருக்கும் ஆசிரியர் திரு சி. கந்தசாமிக்கு பிரிவுபசாரம் ஒன்று “கோபாலகத்தில்” நடைபெற்றது. அவரது சேவைத்திறனை வைத்தியர் திரு பி. குசைப்பிள்ளை பாராட்டிப் பேசினுர். மற்றும் பலரும்பேசியதுடன் சிற்றுண்டி வுருந்துடன் விழா முடிவெய்தியது

## ‘டேவிஸ் கப்’ போட்டியில் ரஷ்யா சேரும்

லண்டன், ஜன. 7

டேவிஸ் கப்புக்கான டென்னிஸ் விளையாட்டுப் போட்டியில் சேர ரஷ்ய விண்ணப்பித்திருக்கிறது.

## பட வசூல் 20 லட்சம் டாலர்

லண்டன், ஜன 7

பிரிட்டிஷ் நகைச்சுவைப் படமான “கரி ஒன் நர்ஸ்”, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில், 20,00,000 டாலர்களை ஈட்டியிருக்கின்றது. அமெரிக்கச்சந்தையில் இவ்வளவுகூடிய பணமீட்டிய பிரிட்டிஷ் படங்களுள் இதுவும் ஒன்ருகும்.

## லண்டனில் ஆபிரிக்க உணவுசாலை

லண்டன், ஜன 7

லண்டனில் முதன் முதல் ஆபிரிக்க உணவுசாலை ஒன்று ஏல்ர்ஸ்கோர்ட்டில் திறக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வுணவுச்சாலையில், நிலக்கடலை, கிழங்குகள், கஸாவா, வாழைப்பழங்கள், தேங்காய்ப் பணியாரம் முதலியன அளிக்கப்படுகின்றன. இவ்வுணவுச்சாலை கானுவை ஹைகமிஷனரால் ஆபிரிககூட்டு இல்லத்தில், ஆபிரிக்கரின் சமூக நிலையத்தில், திறந்துவைக்கப்பட்டது.

## தற்கொலை

சில்லாலை, ஞாயிறு

விளானைச் சேர்ந்த செல்லையா சந்தியாப்பிள்ளை என்பவர் கடந்த 3-1-62இல் பண்டத்தரிப்பு அர்ச். செபமாலை மாதா கோவிலுக்கு அண்மையில் உள்ள கிணறு ஒன்றில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இது பற்றிச் சங்கானை பொலிஸ் நிலயத்திற்கு அறிவிக்கப்பட்டு நடைபெற்ற பிரேத பரிசோதனையில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## பாரிசில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

பாரிஸ், ஜன. 7

பாரிசிலுள்ள கம்யூனிஸ்ட் தலைமைக்காரியாலயம் யந்திரத் துப்பாக்கியினுல் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து, தடை உத்தரவை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலமாகச் சென்றனர். காரியாலத்தைச் சுற்றி இபபோது தடைகள் போடப்பட்டிருக்கின்றன.

## மரச்சாமான் காட்சி

லண்டன், ஜன. 7

லண்டனில் ஜனவரி 29-ம் திகதிமுதல் பெப்ரவரி 10ம் திகதிவரை நடக்கவிருக்கும் பிரிட்டனின் மரச்சாமான் கண்காட்சி உலகில் மிகப்பெரிய சாதனையாகும் 250,000 சதுர அடித் திடலில் பிரிட்டனின் 250 பிரபல உற்பத்தியாளரின் உற்பத்திகளால் நிரப்பப்பட்டிருக்கும்.

## வோல்டாஅணைக்கட்டு

லண்டன், ஜன. 7

பிரிட்டிஷ் சுரங்க சாதன கம்பனி மிஸேஸ ஜோய் கலீவன், கானுவின் வோல்டா அணைக்கட்டுத் திட்டத்திற்கு உதவிசெய்ய பாறைகளைத தகர்க்கும் இயந்திரங்களை அளிக்க முன்வந்துள்ளது.

50,000 பவுண்கள் பெறுமதியான சாதனம் கின்ரேக் கம்பெனியிலிருந்து, இத்திட்டப்திற்கு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

## மணி வாக்கு

'எனக்கு நான் நன்மை செய்துகொண்டு மோட்சத்தை அடைவதைவிட, மற்றவர்களுக்குநன்மை செய்து ஆயிரம் நரகங்களுக்கும் செல்லநான் தயாராய் இருக்கிறேன்.'

—சுவாமி விவேகானந்தா.


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மார்கழி மீ24 உ (8-1-62)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## சென்னை காட்டும் நல்ல வழி

வருகிற பிப்ரவரி மாதம் நடைபெறும் பொதுத் தேர்தலில் சென்னை ராஜ்யத்திலே போட்டியிடும் 11 அரசியல் கட்சித் தலைவர்களும் கூடி தேர்தல் விஷயமாக நல்லதோர் ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பது வரவேற்கத் தக்கதோர் புதுமையாவதுடன் இலங்கைக்கும் இது நல்லதோர் வழிகாட்டியாகும்.

காங்கிரஸ், கம்யூனிஸ்ட், பிரஜா சோஷலிஸ்ட், சுதந்திரா, திராவிடமுன்னேற்றக் கழகம், பாரதிய ஜன சங்கம், சோஷலிஸ்ட். சோஷலிஸ்ட் தொழிற் கட்சி, தமிழ் அரசுக் கழகம், நாம் தமிழர், முஸ்லிம் லீக், இந்த 11 கட்சி பிரதிநிதிகளும் கையொப்பமிட்டுள்ள இந்த ஒப்பந்தப்படி, தேர்தல் பிரசாரத்தை சாதி, வகுப்பு இனதுவேஷத்தைக் கிளப்பாமலும், பலாத்கார ஒழுங்கீனங்களில் இறங்காமலும், போட்டி அபேட்சகர்களை தனிப்பட்ட முறையில்தாக்காமலும் இருப்பதென்றும், போட்டிக் கூட்டங்களில் கலாட்டாக்கள் செய்வதில்லை என்றும் ஒப்புக்கொண்டிருப்பது பெரிய காரியம். இந்த நிபந்தனைகளைப் பல கட்சிகளும் கௌரவித்து நடப்பராயின் சென்னையிலேயே இந்தப் பொதுத் தேர்தல் மிக அமைதியாகவும் ஒழுங்காகவும் நடந்து, ஜனநாயகம் பலப்பட மிக உதவியாக இருக்கும்.

இந்த ஒப்பந்தப்படி எந்தக் கட்சியும், தேர்தல் கூட்டங்களில் பொலிசாரைத் தாக்கிப் பேசக்கூடாது. தனிப்பட்ட பொலிசார் மீது ஏதும் புகார் இருந்தால் இதை மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். மசூதிகள், கிறிஸ்தவாலயங்கள், கோவில்கள் முதலிய வழிபாட்டு ஸ்தலங்களில் தேர்தல் பிரசாரம் நடைபெறக் கூடாது. ஆள்மாருட்டம், வாக்காளருக்கு பணம் கொடுப்பது, முதலிய காரியங்களை எல்லாக கட்சிகளும் ஒதுக்கும், வாக்காளருக்குப் பல கட்சி அபேட்சகருக்குக் கொடுக்கும் அடையாளத் துண்டுகளில் எவ்வித தேர்தல் அடையாளக் குறிகளும் இருக்கப்படாது அரசாங்கக் கட்சியும், ஒழுங்கையும் அமைதியையும் நிலை நாட்டுகையில் பல கட்சிகளும் தேர்தல் பிரசாரம் நடத்துவதில் எவ்வித தடையும் செய்வதில்லை என்றும் ஒப்புக் கொண்டிருக்கிறது. தேர்தலை அமைதியாக நடத்த தேர்தல் அதிகாரிகளுடன் எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க சம்மதித்துள்ளன.

இந்த ஒப்பந்தத்தை யாரும் மீறினால் அது பற்றிப் புகார் செய்து கொள்ள, ஒரு நிரந்தரக் கமிட்டியும் நியமிக்கப் பெற்றுள்ளது. அக் கமிட்டியில் ஒரு மந்திரியும், தி.மு.க. சுதந்திரா, கம்யூனிஸ்ட், பிரஜா சோஷலிஸ்ட் முதலிய நான்கு கட்சிப் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கின்றார்கள். இந்த ஒப்பந்தம் சரிவர நிறைவேறுமா என்பது இனித்தான் தெரிய வேண்டும். என்றாலும் இதற்கான முயற்சியை எல்லாக் கட்சிகளும் சேர்ந்து செய்ததே பெரிய காரியம்.

இலங்கையில் பொதுத் தேர்தல் என்றாலே, கள்ளத் தோணிகளின் எண்ணிக்கை லட்சக் கணக்கில் பெருகுவதுடன், வகுப்பு, இனதுவேஷத்தைப் போட்டா போட்டியுடன் பல கட்சிகளும் வளர்ப்பது ஒரு சாபத தீடாகிவிட்டது.

ஆதலால் இங்கு ஜனநாயகம் பலப்படமுடியவில்லை. இந்த நிலைமை மாற, சென்னை காட்டியுள்ள வழியை, இங்குள்ள பல கட்சிகளும் பின்பற்றி அவ்விதமே நடக்க முடியுமாயின், இலங்கையில் கண்ணியஸ்தர்களும் தேர்தலில் போட்டியிட தயங்காமல் முன்வருவதுடன் இங்கு ஜனநாயகமும் வளர்ந்தோங்க வழி பிறக்கலாம்.

# பிரிவினையுணர்ச்சியை வேருடன்களையவேண்டும்

## பாட்னா காங்கிரஸ்மகாநாட்டில்தலைமை உரை

**பாட்னாவில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸின் 67வது வருடாந்த மகாநாட்டில், திரு. சஞ்சீவிரெட்டி நிகழ்த்திய தலைமை உரையின் சுருக்கத்தை இங்கே காணலாம்.**

இரண்டாவதுஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து மூன்றாவது திட்டத்தை நடத்திவைக்கும் பெரு முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். சமூக பொருளாதார வளர்ச்சிக்கு முதல் இரண்டு திட்டங்களும் உறுதியான அஸ்திவாரத்தை அமைத்துக் கொடுத்தன. உருக்காலைகள், பெரியவிசை உற்பத்தி நிலையங்கள், இயந்திரத் தயாரிப்புத் தொழிற்சாலைகள் போன்ற அடிப்படைத் தொழில்களை மேற்கொண்டோம். அவை பூர்த்தியடைந்துவிட்டன. அல்லது முடிவுறும் கட்டத்தில் இருந்து வருகின்றன. இந்த வசதியின் அடிப்படையில் மூன்றாவது திட்டகாலத்தில் இன்னும் துரிதமான தொழில் வளர்ச்சியையும் பொருளாதார முன்னேற்றத்தையும் அடைவதில் முனைந்திருக்கின்றோம்.

### அடிப்படைப்பிரச்சினை

இந்தியாவின் அடிப்படைப் பிரச்சினைநாட்டின்செல்வத்தை உயர்த்துவது மட்டுமல்ல மக்களிடையே எல்லாப்பிரிவினரும் வளர்ந்துவரும் தேசிய சுபிட்சத்தில் பங்கு கொள்ளக் கூடியதான ஒரு சமூக, பொருளாதார முறையையும் தோற்றுவித்தாகவேண்டும். தேசியவருமானம் இப்பத்தாண்டில் முந்திய பத்தாண்டு நிலவரத்தைவிட 42% கூடுதலாகியுள்ளது. தனிநபரின் சராசரி வருமான உயர்வு 16 சதம். சமுதாய நலப்பணிகள் முறையையும் தோற்றுவித்தாகவேண்டும். எக்காலத்திலுமே ஏற்றத் தாழ்வுகளும் பாகுபாடுகளும் கெடுதலுள்ளவை. தரும நியாயப்படி தவறானவை. இணக்கமாக தேசிய முயற்சியின்மூலம் தன் பொருளாதார அந்தஸ்தை உயர்த்திக்கொள்ளப் பார்க்கும் சமூகக்கட்டுக்கோப்பில் அவற்றிற்கு இடமில்லை. வாய்ப்புக்கள் விஷயத்திலுள்ள இந்த ஏற்றத் தாழ்வுகள் விஷயத்தைச் சீர்படுத்தி குறைகளை நிறைசெய்ய வேண்டும்.

### கல்வி முன்னேற்றம்

கல்வித்துறையில் காணப்படும் பெரிய முன்னேற்றம், விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது. நன்றாக வாழ்வதும், பரந்த உள்ளத்துடன் செயல்படுவதும்,கல்வியின் தரம் உயருவதையே முக்கியமாகப் பொறுத்துள்ளது. தொழில் வளர்ச்சிக்கு அஸ்திவாரமாயுள்ள தொழிற்கல்வியின் போதனையில் குறிப்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் சீரழிந்துபோன ஜப்பானும் மேற்கு ஜெர்மனியும் சோவியத்யூனியனும் குறைந்த காலத்தில் மிகப் பிரமாதமாக வளர்ச்சி கண்டதற்கு பிரதான காரணம், திறமையும் நல்ல பயிற்சியும் உள்ள தொழிலாளர் ஏராளமாக இருந்ததுதான். தம் நாட்டின் பொருளாதார நிலைமையைத் துரிதமாக உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்துடன் அவர்கள் அரும்பாடுபட்டனர். ஒரு உருக்காலையை அமைப்பது சுலபம். ஆனால் தகுதிவாய்ந்த என்சினீர்களையும், தொழில்முறை அறிவுள்ளவர்களையும் தயார் படுத்துவதற்கு அவகாசமாகிறது. இதைவிட முக்கியமானது ஒழுங்கான விஞ்ஞானப் பண்பையும் சூழ்நிலையையும் நாட்டில் தோற்றுவிப்பது.

### பிரிவினையுணர்ச்சி

சமீபத்தில் தலைதூக்கிய வகுப்புவாத, மொழிவகை சர்ச்சைகளை விரிவான கண்ணோட்டத்துடன் அணுகிச் சமாளிக்க வேண்டும். இவை சமுதாயத்துக்கும், தேசத்துக்கும் எதிரிடையான சக்திகள். வேருடன் இவற்றைக்களையவேண்டும். விரும்பாத உணர்ச்சிபூர்வமான கிளர்ச்சிகளை மக்களிடையே தோற்றுவிப்பதுடன், தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு குந்தகமாகிவிடுகின்றன. மக்கள் உணர்ச்சிவசப் படுகையில், தமது பிராந்திய அல்லது மொழிப் பிரச்சினைகள்மட்டுமே அவர்களுடைய மனதை நிரப்பிக் கொண்டிருக்கிறது. இவ்வேளையில் தேசிய பெருநோக்கங்களுக்குத் துணைபுரியும் நாட்டம் அவர்களுக்கு இராது.

### மொழிவழி ராஜ்யங்கள்

நாற்பது ஆண்டுகளுக்கு முன், காங்கிரஸ், மொழிவழி மாகாணங்களின் தோற்றுவாயை விரும்பியது உண்மையே. சமுதாயத்தின் விரிந்த கட்டுக்கோப்பிற்குள் தேசத்தின் ஒவ்வொரு பிரிவும், தன் சொந்த கலாச்சாரத்தை தன் வழியில் அனுபவிப்பதற்காக சுதந்திரமாக வாழவேண்டுமென்பதே தன் நிலைமை என்று 1945-46 ல் தேர்தல் விஞ்ஞாபனத்தில் காங்கிரஸ் கூறியது. இவற்றை மறக்கலாகாது. தனது பிரதேசம், மொழி ஆகியவைகள் விஷயத்தில் பெருமைப்படுவது சுபாவம். அது வரம்புக்கு உட்பட்டதாக இருக்கும் வரை அதனால் தவறொன்றும் நிகழாது. அதே சமயத்தில் பகுத்தறிவுள்ள மானிடர்கள் என்ற வகையில், பிராந்திய அபிமானங்களை விரிவான தேச நலனுக்கு உட்படுத்தும் பண்பினராகச் செயலாற்றுவதற்குத் தெரிந்துகொள்ள வேண்டும். தேசிய நோக்கங்கள் இன்னும் திறம்படக் கைகூடுவதற்கு பயன்படுவதானால் மட்டுமே மொழிவழி ராஜ்யங்கள் நியாயமானதாக இருக்கும் ஆனால் அவை உணர்ச்சிகளைக் கிளப்பிவிட்டு தேசிய விரோதமான சக்திகளை மேலே கொண்டுவருவதாயின் அவற்றை அடக்கத்தான் வேண்டும்.

### ஒற்றுமையுணர்வு

நெருக்கடியான இத்தருணத்தில் நம் நாட்டில் ஒற்றுமையை வளர்ப்பதற்குத்தான் முதலிடம் தரவேண்டும். இது மிக அவசியமாகிவிட்டது. தேசம் என்ற வகையில் நாம் ஒரு கம்பீரமான பண்பாட்டில் வந்தவர்கள். அதை இன்னும் மேம்படுத்தி ஏற்றமடையச் செய்யும் பணி நம்முடையது. நமது ராஜ்யம் அல்லது மொழியைப் பற்றி நாம் சிந்திக்கலாகாது என்பது இதன் பொருள் அல்ல. ஆனால் இந்தியா முழுவதையும் கருத்திற் கொள்ளாமல், குறுகிய பிராந்திய மனப்பான்மையுடன் இருப்பதுஆபத்தானது. பரஸ்பர நல்லெண்ணத்துடனும் சகிப்புத் தன்மையுடனும் விட்டுக்கொடுத்து தீர்வுகாண வேண்டும். மக்கள் உணர்ச்சிப் பெருக்கால் உந்தப்படும் நாட்டம் வரும்படி ஒருக்காலும் அனுமதிக்கலாகாது. எக்காலத்திலுமே இது ஆபத்தானது. உலகப் போக்கு நெருக்கடியாகவுள்ள இத்தருணத்தில் அதன் நிலவரமானது துரிதமாக மாறிவருகையில் இது ஆபத்தானது. நாளையோ மறுநாளோ உலகிற்கு என்ன நேருமோ என்ற அபாயமான நிலையில் நாம் இருக்கிறோம்.

### புத்துணர்ச்சி

தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சினை எவ்வளவு அவசரமாகத் தீர்க்க வேண்டியது என்ற விஷயமாக நமது பிரதம மந்திரி ஒரு புது உணர்ச்சியுடன் அறிவுறுத்தியுள்ளார். இதை வளர்க்கும் நோக்கத்துடன் ஒரு மகாநாடு கூட்டினார். கல்வியின் மூலமாக இந்த நோக்கம் கைகூடச் செய்யலாம். பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் சரியாக நமது பிள்ளைகளுக்கு வரலாற்று நிகழ்ச்சிகளைப் போதிப்பதன்மூலம் இதை அடையலாம். விஞ்ஞானிக்குரிய நடுநிலைமை மனப்பான்மையுடன் பாரபட்சமின்றி, உண்மைக்குப் பெருமதிப்பு கொடுத்து கடந்த காலத்தில் இந்தியாவில்அரசாங்கங்களும், சமுதாயங்களும் தேய்ந்து வீழ்ச்சியுற்ற சந்தர்ப்ப சேர்க்கைகளையும் அதற்குக் காரணமாயிருந்த சக்திகளையும் உணரச் செய்ய வேண்டும். நமது முன்னோர் எத்தனையோ நூற்றாண்டுகள் பக்தி சிரத்தையுடன் பாடுபட்டு வளர்த்த லட்சியங்களின் ஏற்றத்தாழ்வை பக்தி சிரத்தையுடன் கூட, அதே சமயத்தில் குறைதோஷ விமர்சன ரீதியில் மதிப்பிடவேண்டும்.

மனிதன் ஒரு முழு நடவடிக்கைக்குச் சுதந்திரம் உள்ளவன் அல்ல. சமுதாய நிலைமை, சூழ்நிலை தோற்றுவிக்கும் நிர்ப்பந்தங்கள், சரித்திரபூர்வமான சக்திகள், செல்வாக்கு, சொந்த நடத்தை முதலியன இருக்கின்றன. இவற்றிடையே உண்மையை உணர்ந்து உறுதியுடன் நல்வழியில் சென்று நம்பிக்கையுடன், தைரியத்துடன் நமது தேசிய லட்சியத்தைக் காணவேண்டும்.

### அயல்நாட்டுக்கொள்கை

சர்வதேச நிலைமையைக் கவனிப்பதில், நமது பிரதம மந்திரி வழிகாட்டுவது நமது நல்லதிர்ஷ்டமாகும். எல்லா

(5ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

'ஈழநாடு' வாரப்பதிப்பு எப்போது வரப்போகிறது? எப்போது வரப்போகிறது?' என்று பல அன்பர்கள் ஆவலுடன் கேட்டிருந்தனர். வருகிற தைப்பொங்கலன்று வாரப்பதிப்பு வருகிறதென்பதை அறிந்ததும், அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளதுடன், சிலர் வாழ்த்துப்பாக்களையும்அனுப்பியுள்ளனர்.

மூன்று வருடங்களுக்கு முன்பாகஈழநாடுவாரப்பதிப்பாகத் தான் ஆரம்பமாயிற்று. அதை பல அன்பர்கள் வரவேற்றனரென்றாலும், சிலர் 6 மாத கெடு வைத்தார்கள். அதற்கு மேல் இது நீடிக்காதென்று, என் காதில் விழும்படியும் சோதிடம் கூறினர். திருவருள் செயலால் இரண்டாம் வருடத்தில் வாரம் இருமுறையாகி மூன்றாம் ஆண்டில் தினசரியாகி இப்போது ஞாயிறன்றும் வெளிவர இருக்கின்றது.

* * *

எனக்கே இது பெரிய வியப்பு. யாழ்ப்பாணத்தில் தினசரிப் பத்திரிகை நடத்துவதற்கு வசதி மிக மிகக்குறைவு. இதுவரை யாருமே இந்த முயற்சி செய்யத் துணியவில்லை. திருவருளையும், மக்கள் அன்பையும் நம்பியே 'ஈழநாடு' பத்திரிகையை ஆரம்பித்தோம்.

தோதாக சத்தியாக்கிரகமும் வந்ததால் நல்ல சேவை செய்ய 'ஈழநாடு'க்கு வாய்ப்புக் கிடைத்தது. இப்பகுதிகளிலே சுடச்சுட செய்திகளை அறிய வேண்டுமானால் 'ஈழநாட்'டைத் தான் பார்க்க வேண்டுமென்று மக்கள் மனதில் எண்ணம் வேரூன்றி வருவதாக ஓர் அன்பர் கூறக் கேட்டேன். சில இடங்களில் பத்திரிகை சுணங்கி வருவதாயும் அதிகாலையிலேயே எங்கும் கிடைக்கும்படி செய்தால் அதிக ஆதரவு இருக்குமென்றும் அதே அன்பர் தெரிவித்தார்.

* * *

சைக்கிள்கள், மோட்டார் வான்கள், பஸ்ஸுகள் ரயில்கள், விமானம் முதலிய பலவற்றின் மூலம் 'ஈழநாடு' தினசரி அனுப்பப்படுகிறது. இ. போ. ச. பஸ்ஸுகளைப் பற்றிப் பலபல புகார்கள் கிடைக்கின்றன. சில இடங்களில் மூன்று நாள் பார்சலையும் சேர்த்துக் கொடுக்கிறார்களாம். சில சமயம் கொடுப்பதே இல்லையாம்! எவ்வளவோ புகார் செய்தும் சரிப்படவில்லை. கூடுமான எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். திருவருளால் நிலைமை சீக்கிரத்தில் மேம்படுமென்றே நம்பிக்கை. "என் கடன் பணி செய்து கிடப்பதே" ஈழநாடு உங்களது பத்திரிகை. அதன் வளர்ச்சியும் பலவிதங்களிலும் உங்கள் கையில்தான் உள்ளது.

* * *

மலைநாட்டிலிருந்து இரு மாணவர்களை, யாழ்ப்பாணக் கல்லூரிகளில் சேர்ப்பதற்காக ஓர் அன்பர் வந்தார். மலைநாட்டில் கல்லூரி கிடையாதா? என்று கேட்டதற்கு, 'நாடற்றவர்'களுக்கு கல்லூரிகளில் இடம் கிடைப்பது குதிரைக் கொம்பென்றும், தமிழ் சூழ்நிலையில், 'சயன்ஸ்' படிக்கவே இரு மாணவரையும் இங்கு சேர்க்க அழைத்து வந்ததாகவும் தெரிவித்தார் அவர். சிறிது செல்வாக்கு இருந்ததால், ஒரு எம். பி.யின் சிபார்சின்மீது இங்கு ஒரு கல்லூரியில் இருவருக்கும் இடம் கிடைத்தது. இருவரும் நல்ல சூடிகை. முன்னுக்கு வந்துவிடுவர்.

மலைநாட்டு மாணவர்களை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை முதலிய பல இடங்களிலும் கல்லூரிகளில்

( 5ம்பக்கம் பார்க்க)

# "மதத்துக்கும் மொழிக்கும் தொண்டுசெய்பவர்"

## நீக்கிலாஸ் அடிகளாருக்கு உடுப்பிட்டி எம். பி. பாராட்டு

உடுப்பிட்டி, ஞாயிறு

"கத்தோலிக்க மதத்திற்கும் தமிழ்மொழிக்கும் ஏககாலத்தில் தொண்டு புரிந்த நல்லூர் ஞானப்பிரகாச அடிகளாருடன் வாழ்ந்தவரும், அவருடைய அடியைப் பின்பற்றி வருபவருமான ஒரு புனிதத் துறவிகுத் தங்கவிழா தமிழகத்தில் ஓரிடத்தில் மட்டுமன்றி, ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் எடுக்கவேண்டும். ஆயிரக்கணக்கான அரசியல் வாதிகள் தமிழ்மொழிக்குச் செய்யும் தொண்டிலும் பார்க்க, இவர் போன்ற அடிகளார் தமிழ் மொழியை ஓம்பி வளர்ப்பதை நாம் மறந்து, நன்றி கெட்டவர்களாகக்கூடாது."

இவ்வாறு ஞாயிறு காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் மேற்றிராசனத்தைச் சேர்ந்தவரும், கரவெட்டியைப் பிறந்த ஊராகக் கொண்டவருமான வண. அடிகளார் பி. நீக்ச்லாஸ் ஓ. எம். ஐ அவர்களுக்கு, வதிரி திரு. இருதயக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தங்கவிழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கூறினர்.

வண. அடிகளார் ஜே. ஏ. கருணைகரர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:-

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்செல்வங்கள்யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்." என்றபடி, தமிழில் மட்டுமன்றி பிறநாட்டு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற வண. நீக்கிலாஸ் அடிகளார் கத்தோலிக்க மதத்துக்கே ஒரு கலங்கரை விளக்கமாவார்.

திரு. அகஸ்தீன் பொன்ராஜூனின் வரவேற்புரையைத் தொடர்ந்து அடிகளாருக்குப் பல அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

முன்னாள் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. பி. சவரிமுத்து, வித்துவான் ஜே ஏ. என். வேதநாயகம், எஸ். ஆனந்தராஜா ஆகியோரும் பேசினர்.

வண. நீக்கிலாஸ் நன்றி தெரிவித்தார்.

## அநியாய வரி ரத்து

பஞ்சிம், ஜன. 7

கோவாவில் ராணுவம், பாதுகாப்பு ஆகிய செலவினங்களுக்காக போர்த்துக்கேயர் வசூலித்த அநியாய வரி ரத்துச் செய்யப்பட்டது. கடற்படையினரிடமிருந்து அஞ்ச தீவு நிர்வாகத்தை ரிசர்வ் போலிஸார் ஏற்றிருக்கின்றனர்.

## சனசமூக நிலைய தெரிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஐயனர் கோவிலடி சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் துரையப்பா மண்டபத்தில் நடைபெற்றது. புதுவருட தேர்தலின் போது தலைவராக திரு. ஆ. செகராசசிங்கமும், தனதிகாரியாக திரு. சி. மயிலானந்தனும், காரிதரிசியாக திரு. ம. மகேஸவரனும், பொறுப்பாளராக திரு. மு. யோகரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மின்சார கட்டணம்

கொழும்பு, ஞாயிறு

வீட்டுத்தேவைகளுக்கு உபயோகிக்கப்படும் மின்சாரத்தின்மீதுவிதிக்கப்படும் மாதாந்தக்கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. மாதமொன்றுக்கு 8 ரூபாவாக இருந்த இக்கட்டணம் இப்போது 3 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

சிறு வீடுகளில் வசிப்போர்களின் நலன்கருதியே இவ்வாறு மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. வீட்டுத் தேவைகளுக்கு மின்சாரம் உபயோகிபவர்கள்மீது இதுவரை ஒரேவிதமானகட்டணம் விதிக்கப்பட்டிருந்தது. புதிய முறையின்படி பெரிய வீடுகளில் வசிப்பவர்கள் அதிகமான கட்டணத்தையும் சிறிய வீடுகளில் வசிப்பவர்கள் குறைந்த கட்டணத்தையும் செலுத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

# புற்றுநோய் தடுப்புச் சங்கம் பணஉதவி கோருகிறது

கொழும்பு, ஞாயிறு

புற்றுநோய் தடுப்புச்சங்கம் அரசாங்கத்திடமிருந்து மேலதிகமான பணஉதவி கோரியுள்ளது.

புற்றுநோயாளருக்குச் சிகிச்சை வழங்குவதற்கு குறைந்தது 150,000 ரூபாயேனும் தேவைப்படுகிறதுஎனப் புற்றுநோய் தடுப்புச்சங்கம் அண்மையில் வெளியிட்ட தனது அறிக்கையில் கூறியுள்ளது.

கடந்த ஆண்டில் இந்தச் சங்கம், 91,666,69 ரூபாயை வருமானமாகப்பெற்றது. கொழும்பில் ஒரு காரியாலயத்தை நிறுவுவதற்கும், தாதிகளுக்கான வீட்டை அமைப்பதற்கும் புற்றுநோய் தடுப்புச்சங்கம் சென்ற ஆண்டில் பெருந்தொகையான பணத்தைச் செலவுசெய்தது. சுகாதார சேவை டைரக்டர் வருடாந்த நிதியாக 60,000 ரூபாயைச் சங்கத்துக்கு வழங்கினர். சமூக சேவை டைரக்டர் சென்ற ஆண்டுக்கான நிதியை இன்னும் வழங்கவில்லை.

மாதாந்தம், ஒவ்வொரு நோயாளிக்கும் சங்கம் 5 ரூபாய் 35 சதம் வீதம் வழங்கிவருகிறது. புற்றுநோயாளிகள் 84 பேருக்குச் சங்கம் இவ்வாறு பணம் வழங்கிவருகிறது.

## அநுராதபுரம் பொது நூல்நிலையம்

அநுராதபுரம், ஞாயிறு

அநுராதபுரம் பொது நூல் நிலையத்தை இரண்டாகப் பிரிப்பதைத் தடுக்க வேண்டாமென நூலகத்தின் அங்கத்தினர்களும் வரியிறுப்பாளர் சங்க அங்கத்தினர்களும் பிரதமரைக்கேட்டுக் கொள்ளவிருக்கிறார்கள்.

நூலகத்தின் சுய பாஷைப் பிரிவையும் சுதேச இலக்கியங்களையும் தனியாகப்பிரித்து ஒரு சுதேச நூலகத்தை நிறுவ அநுராதபுரம் பாதுகாப்பு சபைத் தலைவர் உத்தேசித்திருக்கிறார்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஞாயிறு

பண்ணை இருதய சிகிச்சை நிலயத்தில் அப்போதிக்கரியாகக் கடமையாற்றிய திரு. சிதம்பரநாதன் இராமலிங்கம் கொழும்பு பல்வைத்திய நிலயத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

## புற்றுநோயின் ஆதிக்கம் குறைகிறது?

யாழ்ப்பாணம், திங்கள்

புற்றுநோயால் இறந்தவர்களினதும், புற்றுநோய்க்குவைத்திய சிகிச்சை பெற்றவர்களினதும் தொகை 1959-ம் ஆண்டிலும் பார்க்க 1960-ல் குறைந்திருந்ததாக இலங்கை புற்றுநோய்ச் சங்கத்தினரின் புள்ளிவிவரங்களிலிருந்து தெரியவருகிறது.

1960-ல் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்றவர்களது எண்ணிக்கை 5,832. 1959-ல் மொத்தம் 6,780 பேர் சிகிச்சை பெற்றனர்.

1959-ல் புற்றுநோயால் இறந்தவர்களின் தொகை 664; 1959-ல் 652 பேரே புற்றுநோயால் இறந்தனர்.

## பிரிவினையுணர்ச்சியை.

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

உலக நாடுகளுடன் பரஸ்பர நட்பையும், சமாதானத்தையும் வளர்ப்பதும், எந்த ராணுவ வல்லரசு கோஷ்டிகளிலும் கூட்டுகளிலும் சேராமலிருப்பதும்தான் நமது கொள்கையாகும். இதை நாடும் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தியாவில் கோவா பகுதியில் போர்த்துக்கேய ஆதிக்கத்தை வெளியேற்றியதன் மூலம் அங்கு வேரூன்றிக் கிடந்த காலனி ஆட்சி முறையின் கடைசி சக்திகளும் கிள்ளியெறியப்பட்டது பெரும் மகிழ்ச்சியூட்டுவதாகும்.

### கெடுபிடிப் போர் நீங்கவேண்டும்

கடந்த ஓராண்டில் ஆபிரிக்க நாடுகளிடையில் பெரும் விழிப்பு ஏற்பட்டுள்ளது. அந்த நாட்டு மக்களின் சுதந்திரத்தாகம் மேலும் மேலும் வெளிப்படையாகத் தெரிந்துகொண்டு வருகிறது. சர்வதேச சக்திகள், காலனி ஆதிக்கம் செத்துமடிந்து, அதற்கு சமாதி கட்டுவதற்கு உதவும் வகையில் இயங்கும் என்பது உறுதி இதை விரைவில் எதிர்பார்க்கலாம். காங்கோ-கடாங்கா போன்ற இடங்களில் நாமும், நமது படைகளும் ஐ நா. இலட்சியங்களை ஈடேற்ற குறிப்பிடத்தக்க சேவை புரிந்துவருகிறோம். சர்வதேச சகோதரத்துவத்திலும், நல்லெண்ணத்திலும் நமக்குள்ள நம்பிக்கையை இவை காட்டுகின்றன. விரைவிலே கெடுபிடிப் போர் தீரவேண்டும் என்ற விருப்பத்தை காட்டுவதாகும். அணு ஆயுதசோதனைகளை மீண்டும் ஆரம்பிப்பதன் மூலம் சோவியத் யூனியனும் அமெரிக்காவும் சூழ்நிலையை பாதிப்பது பெரிதும் வருந்தத்தக்கது. இந்நாடுகளிடையே விவேகம் நிலவும் என்று நம்பியிருப்போமாக.

### எல்லைப் பாதுகாப்பில் உறுதி

உலக இராஜதந்திரியான நமது பிரதம மந்திரி நமக்கு வாய்த்திருப்பது அதிர்ஷ்டமேயாகும். அவர் வழிகாட்ட வேண்டுமென்று பலநாடுகள் அவரை நாடுகின்றன. கோவாவில் அவர் எடுத்த நடவடிக்கை நமது எல்லைகளைப் பாதுகாப்பதன் அவசியத்தை அவர் உணர்த்தியிருக்கிறார் என்பதையே காட்டுகிறது. நமது நாட்டின் எல்லைப்புறத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவதில் இதே உறுதிப்பாடு காட்டப்படுமென்று நிச்சயமாக நம்பலாம். நாமனைவரும் பாரத மக்கள். நட்பு முறையில் வேற்றுமைகளைக் களைவோம். ஒன்றுபட்டு நட்புடனும் நல்லெண்ணத்துடனும் வாழக் கற்போம்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமாகச் சேர்த்துக் கொண்டு பயிற்சி அளிக்க வேண்டுமென்கிறார் ஓர் அன்பர். ஆனல் இதற்கும் சட்டத்தைகள் என்ன போடுகிறார்களோ?

# 'ஜீப்' மோதியதால் கட்டுவன் வாசி மரணம்

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன் துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கட்டுவன் வாசியான சின்னையா கணபதிப்பிள்ளை (48) என்பவர் ஜீப் ஒன்றினல் மோதுண்டு மரணமாகியது சம்பந்தமாக மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் மரண விசாரணை நடத்தினர்.

காங்கேசன்துறை மாவட்ட போக்குவரத்துப் பகுதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சில்வா சாட்சிகளை ஆஜர் செய்தார்.

ஜீப்பை ஓட்டிச் சென்ற மயிலிட்டி வாசியான நல்லதம்பி சிற்றம்பலம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நான் சனிக்கிழமை இரவு 9-30 மணியளவில் கட்டுவன் மயிலிட்டி வீதிவழியாக வடக்கு நோக்கி எனது ஜீப்பை ஓட்டிச் சென்ற சமயத்தில், ஒருவர் தெற்கு நோக்கி வீதியின் வலது பக்கமாக நடந்து வந்தார். ஜீப் அவருக்கு சமீபத்தில் வந்ததும் அவர் திடீரென வலது பக்கம் இருந்து இடது பக்கம் பாய்ந்தார். இதைக் கவனித்த நான் பிறேக்பிடித்து ஸ்டியரிங்கை திருப்பினேன். ஆனல் அதற்குள் ஜீப் அவரை மோதிவிட்டது.

நான் உடனே அவரைக் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன். அவர் அங்கு அனுமதிக்கப்பட்ட ஒரு மணிநேரத்தில் மரணமானர்.

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் செல்வி. விமலராணி கதிரவேலுவும் சாட்சியமளித்தார்.

மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த கார் சாரதியான சங்கரப்பிள்ளை கணேசரத்தினம் சாட்சியமளித்தபின் நீதிபதி விபத்தினல் ஏற்பட்டமரணம் எனத் தீர்ப்பளித்தார்.

ஜீப்பை அரசாங்க மோட்டார் பரிசோதகரைக் கொண்டு பரிசோதனை நடத்துமாறு உத்தரவிட்டு, சாரதியை ரூ 1000 பிணையில் செல்லுமாறும் இம்மாதம் 18-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகுமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

காஷ்மீர்

# பாகிஸ்தான் நிலைபற்றி நேரு

அலகாபாத், ஜன. 7

"காஷ்மீர் விவகாரம் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பாகிஸ்தான் தயாராகவில்லை. காஷ்மீரை தன்னிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்றே பாகிஸ்தான் விரும்புகிறது. இதற்கு இந்தியா ஒருபோதும் ஒப்புக்கொள்ளாது" என்று பாரதப் பிரதமர் ஸ்ரீ நேரு இன்று அலாகபாத் வந்து சேர்ந்த பொழுது நிருபர்கள் கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் கூறினர்.

பாகிஸதான் பத்திரிகைகள் இந்தியாவுக்கு எதிரான பிரசாரங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ள போதிலும் பாக்கிஸதான்மீது இந்திய மக்கள் விரோதம் பாராட்டவில்லையென்று ஸ்ரீ நேரு தெரிவித்தார்.

## கைத்தறி வாரம்

சென்னை, ஜன. 7

தமிழ்நாட்டில் இன்று கைத்தறிவாரம் ஆரம்பமானது. இவ்வைபவத்தை சென்னை கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி இன்று மாலை ஆரம்பித்து வைத்தார்.

## துருக்கி - ரஷ்ய ஒப்பந்தம்

மாஸ்கோ, ஜன. 7

துருக்கியும் சோவியத் யூனியனும் பண்டமாற்று ஒப்பந்தமொன்றில் இன்று கைச்சாத்திட்டன.

## பம்பாயில் மொரிஷியஸ் மந்திரி

பம்பாய், ஜன. 7

மொரிஷியஸ அரசாங்கத்தின் கல்விமந்திரி புதுடில்லி செல்லும் வழியில் இன்று பம்பாய் வந்துசேர்ந்தார்.

## பொலிசார் ஏற்றனர்

பங்கஜக், ஜன. 7

விடுதலையடைந்த அஞ்சதீவில் விடுதலைபெற்றுத் தந்த ராணுவத்தினரிடமிருந்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பை மைசூர் பொலிசார் ஏற்றுக்கொண்டனர்.

## மகாராஷ்டிரத்தில் சுதந்திராகட்சி

பம்பாய், ஜன. 7

பொதுத்தேர்தல் மகாராஷ்டிரத்தில் பார்லிமெண்ட் சபைக்கு மூன்று ஸ்தாபனங்களிலும் ராஜ்ய சபைக்கு பத்து ஸ்தானங்களுக்கும் போட்டி நடக்கப்போவதாக சுதந்திராக்கட்சி அறிவித்துள்ளது.

## அசோக்மேத்தா எச்சரிக்கை

புதுடில்லி, ஜன. 7

இந்திய பிரதேசத்தில் பெருமளவுப்பகுதிகளை ஆக்கிரமித்துள்ள சீனவும் பாகிஸதானும் இந்தியாவை ஆக்கிரமிப்பதற்காக கூட்டுச்சேர்வதற்கிருக்கின்றனவென்றும் இவைபற்றி மக்கள் விழிப்புடனிருக்க வேண்டுமென்றும் சோஷலிஸட் கட்சித் தலைவர் அசோக மேத்தா ஒரு கூட்டத்தில் கூறினர்.

# போலி சுவீப் டிக்கட்டுக்கு ரூ. 75,000 பெறமுயன்றூர்

## எதிரிக்கு புத்தி மட்டு என வழக்கறிஞர் வாதம்

கொழும்பு. ஞாயிறு

ஆஸ்பத்திரி ஸ்வீப் டிக்கட் ஒன்றைக் கள்ளத்தனமாக அச்சடித்துச் சென்று தானே முதலாம்பரிசுக்குரியவர் என்று ஆஸ்பத்திரி சுவீப் சபை மனேஜரிடம் கூறி ஏமாற்றப்பார்த்த டொன் டேவிட் மெல்டர் என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு. கொழும்பு மாஜிஸ்ரேட் திரு. ஜே. எஸ். சி திருச்செல்வத்தின் முன்னர் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஆஸ்பத்திரி சுவீப்பின் 144வது இழுப்பின் போது இந்த சம்பவம் நிகழ்ந்தது. முதலாம் பரிசுக்கான 75,000 ரூபாய்க்கு உரியவர் தானே என்று கூறிக்கொண்டு அதைப் பெறுவதற்கெனப் போலி சுவீப் டிக்கட்டை டேவிட் மெல்டர் மனேஜரிடம் கொண்டு சென்ருராம்.

வழக்குவிசாரணையின் போது டேவிட் மெல்டரின் சார்பில் திரு. ஏ. பொன்னுத்துரையின் அனுசரணையுடன் திரு. எஸ். டி. பேர்சிவலன்டைன் ஆஜராகியிருந்தார்.

டேவிட் மெல்டர் புத்திக் குறைவானவர் என்றும் வேறு ஆட்களின் தூண்டுதலின் பேரில்தான் அவர் இந்தச் செயலில் இறங்கினர் எனவும் திரு. பேர்சி வலன்டைன் கூறினர்.

மாஜிஸ்:- பொதுமக்களின் சொத்துக்கள் பாதுகாக்கப் படவேண்டும். இவரைச் சும்மா விட்டுவிடக் கூடாது.

வழக்கறிஞர்: அவர் உண்மையில் புத்தி குறைந்தவர். வேறு ஒருவரின் தூண்டுதல் காரணமாகவே அவர் இச்செயலைச் செய்திருக்கிருர் அவர் மனைவியையும் நான்கு பிள்ளைகளையும் அவர்தான் பாதுகாக்க வேண்டியவர்!

மாஜிஸ்: (மெல்டரிடம்) உன் மனைவியுடன் கலந்தாலோசித்த பின்னரோ இந்தச் செயலைச் செய்தாய்!

மெல்டர்: இல்லை ஐயா.

மாஜிஸ்: மனைவிக்கு சொல்லியிருந்தாயானல் அவ்வாறு செய்யாது தடுத்திருப்பாள். வெகு சீக்கிரத்தில் பணம் சம்பாதித்துவிட நினைப்பதுதான் உங்களைப் போன்றவர்களிடையே காணப்படும் குறை. கடும் உழைப்பினல்தான் வெற்றி கிடைக்கும் என்பதை மறந்தேவிடுகிறீர்கள்.

விசாரணை முடிவில் மாஜிஸ்டிரேட் மெல்டருக்கு ஆறு மாதக் கடுஞ் சிறைத்தண்டனை விதித்தார்.

# லங்கஸ்டர் சர்வகலாசாலை நகரம்

லண்டன், ஜன. 7

லங்கஸ்டர், பிரிட்டனின் நான்காவது புதிய சர்வகலாசாலை நகரமாகத் திகழும். இக்கட்டிடம் 2,000,000 பவுண்கள் செலவில் அடுத்த வருடம் கட்டத் தொடங்கி 1963-ம் ஆண்டு அல்லது 1964-ம் ஆண்டளவில் கட்டி முடிக்கப்படும் என்று எண்ணப்படுகிறது. இக்கட்டிடம் 1000 மாணவர்களுக்கு இடமளிக்கும்.

இக்கட்டிட செலவின் பெரும் பகுதியை அரசாங்கம்தான் அளிக்கும். மிகுதியை உள்ளூர் அதிகாரிகளும் கைத்தொழிலாளர்களும் அளிப்பர்.

# ரூ. 30 லட்சம் பெறுமதியான ரண சிகிச்சை உபகரணங்கள் அழிந்துபோகலாம்!

## நிதிஉதவ திறைசேரி மறுப்பு

கொழும்பு, ஞாயிறு

சுமார் 30 லட்சம் பெறுமதியான ரணசிகிச்சை உபகரணங்களும், ஏனைய வைத்திய உபகரணங்களும் அழிந்துபோகும் தறுவாயில் இருக்கின்றன.

கொழும்பு ஆஸ்பத்திரிகளிலுள்ள இந்த உபகரணங்களைப் பேணிப்பாதுகாப்பதற்கென உதவப்படும் நிதியைத் தொடர்ந்து வழங்குவதற்குத் திறைசேரி மறுத்துள்ளது. உபகரணங்களுள்பல திருத்தங்கள் செய்யப்படவேண்டியிருக்கின்றனவாம்.

3 லட்சம் ரூபா பெறுமதியான இந்த உணகரணங்கள் உபயோகத்துக்கு உதவாமல் பழுதடைந்துபோகலாம் என நம்பப்படுகிறது.

இந்த உபகரணங்களில் சில உடனடியாகவே திருத்தப்படவேண்டியிருக்கின்றன எனவும் அவ்வாறு திருத்தாவிட்டால் விலையுயர்ந்த இப்பொருள்கள் பிரயோசன மற்றுப்போய்விடலாம் எனவும், அவற்றைப் பார்வையிட்ட கொழும்பு பெரியாஸ்பத்திரி சுப்ரீண்டன் கூறியுள்ளார்.

பிரஸ்தாப உபகரணங்களைப் பேணுவதற்கு வருடாந்தம் 1,50,000ரூபாய் தேவைப்படுவதாயும், நடப்பு நிதி வருடத்துக்கு இதற்கென 12,000 ரூ. மட்டுமே ஒதிக்கி வைக்கப்பட்டுள்ளதாயும் பெரியாஸ்பத்திரி வைத்திய சுபரீண்டன் கூறியுள்ளார். இரண்டு மாதகாலத்துக்குள் 8000 ரூபாய் செலவாகியுள்ளதென்றும் மிகுதி 4000 ரூபாயுடன் திருத்த வேலைகளைச் செய்யமுடியாது எனவும் கூறியுள்ளார்.

கொழும்புப் பகுதி ஆஸ்பத்திரிக் கமிட்டி இது சம்பந்தமாக சுகாதார மந்திரியைச் சந்தித்துப் பேசவிருக்கிறது.

# பலநோக்க கூட்டுறவுச் சங்க கூட்டம்

தோப்புக்காடு, முருகன் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் 16-ம் வருடாந்தக்கூட்டம் மறைஞானசம்பந்த வித்தியாசாலையில் சங்கத்தலைவர் திரு. க. குமரகுரு தலைமையில் நிகழ்ந்தது. கூட்டத்திற்கு கூட்டுறவு இலாகா சிரேஷ்ட உதவி ஆக்க ஆணையாளர் திரு. இ. இராசரத்தினமும், காரியாலய பிரதம பரிசோதகர் திரு. ஆ. காசிப்பிள்ளையும் வட்டாரப் பரிசோதகர் திரு. த. மயில்வாகனமும் சமுகமளித்தார்கள்.

தலைவர் தம் முன்னுரையில் சங்க ஆரம்பதினம், தற்போதைய நிலை, சங்கம் தனக்கென ஓர் கட்டடம் அமைத்தமை, சங்கம் செய்துகொண்ட ஒப்பந்த வேலைகள், உணவுப்பொருள் ஏற்றிஇறக்குமதி செய்யும் ஒப்பந்தவேலை ஆகியவற்றை விபரமாகக் கூறிய தன் பின், சிரேஷ்ட உதவி ஆக்க ஆணையாளர் சங்கம் அரசாங்க மதிப்புடன் துலங்குதல் கூட்டுறவு இயக்கத்திற்கும் தங்கள் கிராமதத்துக்கும் பெருமையென்றும் இன்னும் கிராம அங்கத்தவர்கள் அனைவரும், ஏகோபித்த அன்பையும் ஒத்துழைப்பையும் காட்டினல் இச் சங்கமொன்றினலே கிராமத்திற்கு விமோசனம் கிட்டுமென்றும், சங்கம் எடுத்துள்ள ஒப்பந்த வேலையில் காரைநகர் தாம் போதிக் கட்டட ஒப்பந்தவேலை போற்றக்கூடியதென்றும் குறிப்பிட்டார். பின் 9 நபர்களைக் கொண்ட புதுவருட நிர்வாக சபைத் தெரிவுடனும் தேநீர் விருந்துடனும் நன்றியுரையுடனும் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

# குண்டுவீசியவர் கஞ்சாவும் கத்தியும் வைத்திருந்தார்

கொழும்பு, ஞாயிறு

பொது வேலைநிறுத்ததின் போது வெடிகுண்டு வீசியதானஒருசம்பவத்தில் கிருண்டபாஸைச் சேர்ந்த எச். யு. தனபால என்பவர் கைதுசெய்யப்பட்டு கொழும்பு கூட்டு மாஜிஸ்ரேட் திரு. எம். ஏ. எம். ஹுஸெய்ன்முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார். அவரை பரிசோதனை செய்தபோது 18 சஞ்சா பைக்கெட்டுகளும் கத்தியொன்றும் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. வருகிற 18ந் திகதிவரை அவர் ரிமாண்டில் வைக்கப்பட்டார்.

# 'ஏமாந்து விடாதீர்!' —திரு. கெனமன்

வத்தளை, ஞாயிறு

முற்போக்குக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் எவரும் ஐக்கிய தேசியக் கட்சியினரின் பித்தலாட்டங்களுக்கு ஏமாந்துவிடக்கூடாதென வத்தளையில் நடந்த கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டம் ஒன்றில் பேசிய திரு. பீட்டர் கெனமன் கூறினர். அரசாங்கத்தின் தற்போதைய கொள்கைகள் பிற்போக்குவாதிகளுக்கு ஊக்கமளிக்கும் முறையில் அமைந்துள்ளனவென்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஏழைமக்களை அதிகம் பாதித்திருக்கிறதெனவும் திரு. கெனமன் கூறினர்.

# வேலைக்கு வராதவர்களுக்கு சம்பளம் வெட்டு

கொழும்பு, ஞாயிறு

கடந்த வெள்ளிக்கிழமை லீவு எதுவுமின்றி வேலைக்குச் செல்லாத அரசாங்க ஊழியர்கள் அதற்குரிய தகுந்த காரணத்தை தெரிவிக்காவிட்டால் அந்த நாளுககுரிய அவர்களின் சம்பளம் வெட்டப்படும்.

இதுபற்றி திறைசேரியின் பதில் காரியதரிசி விடுத்துள்ள சுற்றுநிருபமொன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. "1962ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ந் திகதி அரசாங்க ஊழியர்கள் எதுவித லீவுமின்றி வேலைக்குச் செல்லாத காரணத்தைத் தெரிவிக்காவிட்டால், அந்த நாளுக்குரிய அவர்களின் சம்பளம் வெட்டப்படும்.

ஜனவரி மாதத்திற்குரிய சம்பளம், இம்மாத இறுதியில் வழங்கப்படும்போது வேலைநிறுத்தத்தில் பங்குபற்றிய ஊழியர் யாவரினதும் ஜனவரி 5-ந்திகதி சம்பளம் கழிக்கப்படுகிறதா என இலாகாத் தலைமை அதிகாரிகள் கவனித்துக்கொள்ளவேண்டும்."

# 42 பேர் வேலைக்குத் திரும்பியுள்ளனராம்

கொழும்பு, ஞாயிறு

துறைமுக சரக்குக் கூட்டுத்தாபனத்தின் எஞ்சினியரிங் பிரிவில் கடமையாற்றும் 42 சாரதிகளும் வேலைக்குத் திரும்பியுள்ளதாக செய்தி இலாகாவால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று கூறுகிறது.


# மாணவர் அப்பியாச புத்தகங்கள்

## ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷனல் தயாரிக்கப்பட்ட

முதல் தர ரக கடுதாசியைக் கொண்டு செய்யப்பட்ட மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கோடுகள் இருப்பினும் இல்லாது விடினும் கீழ்க்கண்ட விலைக்கு இலங்கை முழுவதிலும் பெற்றுக்கொள்ளலாம்.

| சில்லறை விலை | | மொத்த விலை | |
|---|---|---|---|
| கடுதாசி தொகை | அ. புத்தகம் ஒன்று | டசின் | குரெஸ் |
| 40 பக்கம் | 11 சதம் | ரூ. 1-20 | ரூ. 14-40 |
| 80 ,, | 20 ,, | ,, 2-40 | ,, 28-80 |
| 100 ,, | 30 ,, | ,, 3-36 | ,, 40-32 |
| 200 ,, | 60 ,, | ,, 6-96 | ,, 83-52 |

மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கீழ் வரும் பத்து ரகங்களிலும் கிடைக்கும் வேறுபட்ட ரகங்களெனினும் அப்பியாசப் புத்தகங்களின் விலை ஒன்றே.

அப்பியாச புத்தக ரகங்கள்:

ஒற்றைக் கோடிட்ட அப்பியாசப் புத்தகம், சதுரக் கோடு, இரட்டைக்கோடு (நீலம்), இரட்டைக்கோடு (நீலமும் சிவப்பும்) ஒருபக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் வரைக கட்டமிடப்பட்டது, கோடு இடாது ஓரம் இடப்பட்டது, ஒரு பக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் கோடுகள் இல்லாதது, ஓரம் இடப்பட்ட அகலமான சதுரக்கோடுகள் இடப்பட்டது, ஓரம் இடப்படாத, அகலமான சதுரக் கோடிடப்பட்டது.

ஐந்தும் ஐந்துக்கு மேற்பட்ட குரெஸ் ஆடர் செய்பவர்களுக்கு:

1. 10 சதவீத கழிவு உண்டு.
2. கொழும்பு ஸ்டோருக்கு அண்மையிலிருக்கும் இடங்களுக்கு ரயில் செலவு ஸ்தாபனம் ஏற்றுக்கொள்ளும்.

விபரங்கள் அறிய:

## ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷன்

போன்: 94040.

6, அல்பேர்ட்க்ரெசன்ட், கொழும்பு 7.

## சின்னையா ஞாபக பாடசாலை

பருத்தித்துறை, ஞாயிறு

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற நாள் தொட்டு சின்னையா ஞாபக பாடசாலை, சித்திவிநாயகர் பாடசாலையில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கிவருகிறது இருநாற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளின் இன்றைய தொகை 85 வரை வந்து விட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் விடுகைப்பத்திரங்களைப் பெற்று காலை நேரம் ஆரம்பமாகும் பிறபாடசாலைகட்கு தம் பிள்ளைகளை அனுப்பும் நோக்கத்துடன் வந்து சேரும் பெற்றோர் தொகை பெருகிவருவதால் பிள்ளைகள் இல்லாது மேற்படி பாடசாலை தானகவே மூடப்படும் நிலைவருமோ? என அச்சம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இரு பாடசாலைகளையும் ஒன்ருக்கவேண்டுமென்னும் கிளர்ச்சி யொன்றும் உருவாகிவருகிறது. இதுவிஷயமாக சின்னையா பாடசாலைத் தலைமை ஆசிரியர் உதவிக் கல்விஅதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

## சாம்ராஜ்ய வாலிபர் சபை

நுவரேலியா, ஞாயிறு

சாம்ராஜ்ய வாலிப சபையின் கிளையொன்று 25 அங்கத்தவர்களுடன் நுவரேலியாவில் உண்டாக்கப்பட்டிருக்கின்றது.

இதன் பிரதான கொள்கையாதெனில் வாலிப மக்களிடையில் சிநேகித பான்மையை வளர்ப்பதே. சாம்ராஜ்ய வாலிபர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தால் அவர்கள் இலங்கையில் மலைப்பிரதேசத்திலிருக்கும் இலங்கை வாலிபர்களை சந்திப்பதற்கு அழைக்கப்படுகின்றன.

## வங்கிகளில் வேலை நேரம் அதிகரிப்பு

கொழும்பு, ஞாயிறு

வங்கிகளின் வேலை நேரம் அதிகரிக்கப்படும் என்று வர்த்தக வங்கிகளின் சங்கமும் இலங்கை வங்கியும் நேற்று அறிவித்தன. வங்கி ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெற்ற போதிலும், நாளை திங்கட்கிழமை முதல் வங்கிகளின் வேலைநேர மாற்றம் அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டது.

கிழமை நாட்களில் வங்கிகள் காலை 9-30 விருந்து 11 மணிவரை திறந்திருக்கும்.

சனிக்கிழமையில் காலை 9-30 விருந்து 10-30 மணிவரை திறந்திருக்கும்.

# "அரசாங்க உதவியை எதற்கும் நாடக்கூடாது"

## கி. மு. சங்கக் கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி.

காரைநகர், ஞாயிறு

"எத்துறையிலும் இனவெறிப் பேதமகற்றி எம்மினத்தை முன்னேறச் செய்ய வேண்டும். எதற்கும் அரசாங்க உதவியை நாடக்கூடாது. எமது சமுதாய முன்னேற்றம் எமது கையில் தான் இருக்கிறது" எனத் தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலையில் சங்கத் தலைவர் திரு. க. குமரகுரு தலைமையின்கீழ் நடைபெற்ற கிராமமுன்னேற்றச்சங்க வருடாந்தக் கூட்டத்தின்போது, வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசுலர்.

தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. டி. சாமுவேல் தம்பையாவும், தீவுப்பகுதி கிராமஅபிவிருத்து உத்தியோகஸ்தர் திரு. வி. சுப்பிரமணியமும் காரைநகர் கிராமச்சங்க அக்கிராசனர் திரு. எம். அம்பலவாணரும், காரைநகர் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு.வி. சுப்பிரமணியமும் முறையே கிராம முன்னேற்றம், குடிசைக் கைத்தொழில், சமூக தேவைகள், பொதுநலசேவை என்ற மேற்கோளகள்படப் பேசினர்கள்.

ஈற்றில் நிர்வாகசபைத் தெரிவுடனும் காரியதரிசி அவர்களின் நன்றியுரையுடனும் கூட்டம் இனிது நிறைவெய்தியது.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது...




குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமைமாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் போஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
த. பெ 189,
கொழும்பு.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது.


## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

திங்கள் 8-1-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 கிளாரினட், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5 45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக் கோஷ்டி.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 கே. சண்முகம்பிள்ளை - வீணை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 தமிழ்மூலம் சிங்களம் -16 9-30 தேர்ந்த இசை, 9-45 நாகேஸ்வரி பிரமானந்தா - பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 எம். எஸ். முத்துக்கிருஷ்ணன் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-00 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 தஞ்சாவூர் வி. பிரேமா - பாட்டு, 1-30 நாகஸ்வரம், 1-50 குரல் இசை.

மாலை 4-45 விவிதபாரதி (கானாடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல் 7-35 நல்லுரை, 7-40 திரைப்பட இசை, 8-00 தாள வாத்தியக்கச்சேரி, 8-30 தஞ்சாவூர் வி. பிரேமா - பாட்டு, 9-30 எம். எஸ். முத்துக்கிருஷ்ணன் - பாட்டு.

## தமிழ் நாடக விழா

வேலணை, ஞாயிறு

வேலணை முத்தமிழ்க் கலை அரங்கத்தினரின் சார்பில் பொங்கல் திருநாளை முன்னிட்டு இருநாட்களுக்கு 'தமிழ் நாடக விழா' நடைபெறவிருக்கிறது. 13-ந்திகதி சனிக்கிழமையும் 14-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இவ்விழா நடைபெறும்.

## அல்ஜீரியாவில் 18பேர் பலி

அல்ஜியர்ஸ், ஜன 7.

அல்ஜீரியாவில் பிரெஞ்சுக்காரர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட ஒரு கைகலப்பில் 18 பேர் மாண்டனர்

# கலை அரங்கம்

## வரலாற்றுப் படங்களில் பத்மினி பிக்சர்ஸ் காட்டியவழி

இந்திய விடுதலைப்போரில் ஈடுபட்ட தமிழ்நாட்டுப் பெரியார்களை இந்திய அரசாங்கம் புறக்கணித்து வந்ததாக சில வருடங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டில் பெருங்குறையொன்று ஏற்பட்டு கிளர்ச்சியாகவும் மாறவிருந்தது.

இந்திய சுதந்திரப் போராட்ட நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டத்தை யொட்டி இந்திய தகவல் பகுதியினர் தயாரித்து வெளியிட்ட சுதந்திரப் போராட்ட வரலாற்றுப் படத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கப்பலோட்டியதமிழன் வ. உ. சி., பாரதியார் போன்றவர்களும் வீரபாண்டிய கட்டபொம்மன், வீரமங்கைவேலு நாச்சியார் போன்றவர்களைப் பற்றிய விபரமும் அந்த வரலாற்றுப் படத்தில் புறக்கணிக்கப்பட்டிருந்ததுதான் இதற்குக் காரணமாகும்.

நல்லவேளையாக இதுசம்பந்தமாக கிளர்ச்சியேற்படாமல் தமிழ்நாட்டு அரசாங்கத்தினர் முயற்சி மேற்கொண்டு அந்த வரலாற்றுப் படத்தில் சில திருத்தங்களைச் செய்து தமிழ்நாட்டில் திரையிட்டனர்.

தமிழ்நாட்டின் பெரியார்களை யார் புறக்கணித்தாலும் அவர்களுடைய புகழை உலகெங்கும் பரப்ப முடியும். என்பதை செய்கையில் உணர்த்தியவர் பத்மினி பிக்சர் உரிமையாளரான பி, ஆர். பந்துலுவும் நடிகர்திலகம் சிவாஜி கணேசனுமாவர்,

சரித்திரக் கதையான வீரபாண்டிய கட்டபொம்மனைத் திரைப்படமாகத் தயாரித்தால் வெற்றி ஈட்டமுடியாதென்று பெரிய பெரிய தயாரிப்பாளர்களெல்லாம் கருதி அந்த எண்ணத்தையே கைவிட்டிருந்தனர்.

இந்தச் சமயத்தில்தான் 'கட்டபொம்மனை' படமாகத் தயாரிக்கவேண்டுமென்று சிவாஜி கணேசன் உற்சாக மூட்டினார். பந்துலுவும் தயாரித்தார்.

'கட்டபொம்மன்' தமிழ்நாட்டிலும் தமிழ் கூறும் நல்லுலகத்திலும் வெற்றிபெற்றது மட்டுமல்ல ஆசிய ஆபிரிகக திரைப்பட விழாவிலும கூட வெற்றி பெற்றது. வெளிநாட்டில் பரிசு பெற்ற முதல் தமிழ்ப் படம் எனற பெருமையும் பெற்றுக் கொண்டதுடன் நடிகர் திலகத்தையும் வெளி உலகுக்கு அறிமுகம் செய்து வைத்துப் பெருமை தேடிக்கொண்டது.

தமிழ் நாட்டின் பெரியார்களையும், தமிழ் நாட்டின் பெருமையையும் உலகறியச் செய்ய முடியும். என்ற பாதையை கட்டபொம்மன் மூலம் வழி வகுத்துக் கொடுதத பத்மினி பிக்சர்ஸ, பெரியவாகளின் வரலாறுகளைத் திரைப்படமாகத் தயாரிப்பதற்கு மேலும் மேலும் தயங்கிக் கொண்டிருந்தவர்களை எள்ளி நகையாடும்வகையில் "கப்பலோட்டிய தமிழன்" வரலாற்றையும் திரைப்படமாகத் தயாரித்து வெற்றியீட்டி விட்டனர்.

ஆஸகார் போட்டிக்கு "கப்பலோட்டிய தமிழன்" படம் அனுப்பப்பட வேண்டுமென்று இப்பொழுது சிபார்சு செய்யப்பட்டுள்ள தென்றால் அதன் சிறப்பைப்பற்றி அதிகம் கூற வேண்டியதில்லை. ஆஸகார் போட்டிக்கு இதுவரை எந்தத் தமிழ்ப் படமும் அனுப்பப்பட்டதாகத் தெரியவில்லை.

### பாதை தெரிந்து விட்டது

தமிழகத்தின் பெயரையும் புகழையும், எவர் இருட்டிப்புச் செய்தாலும், உலகெழுமுவதிலும் பரப்ப முடியுமென பதை பத்மினி பிக்சர்சார் உணர்த்தி விட்டதுடன் மற்றவர்களுக்கும் வழிகாட்டி விட்டனர்.

இன்று மகா கவிபாரதியாரின் வரலாற்றை ஒரு திரைப்படக் கம்பனியார் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். வீரமங்கை வேலுநாச்சியார் சில வருடங்களுக்கு முன்னரே தயாரிக்கத் திட்டமிடப்பட்டு சில காட்சிகளும் படமாக்கப் பட்டன ஆனல் அது துரிதமாக வளர்ச்சி பெறவில்லை.

வடலூர் ராமலிங்கஅடிகளாரின் வரலாறும் படமாக்கப்படவிருக்கிறது. புரட்சிவீரன் புலித்தேவன் சரித்ம் படமாகி வருகின்றது. மருதுசகோதரர்களின் வரலாற்றைக்கொண்ட 'சிவ கெங்கைச்சீமை' திரைப்படமாக வெளிவந்துவிட்டது. (இது வெற்றியளிக்காததற்கு அவசரம்' ஒரு காரணமாக இருக்கலாம்.)

வரலாற்றுப்படங்கள் தயாரிப்பதென்பது சுலபமல்ல. பத்மினி பிக்சர்சார் காட்டிய வழியைப்பின்பற்றி தகுந்த ஆராய்ச்சி செய்துதயாரித்தால் படமும் வெற்றிபெறும். தயாரிப்பாளர்களுக்கும் பெருமை.

—தேனி

## 61-ல் அதிக படங்களில் நடித்தவர் தங்கவேலு

1961-ம் ஆண்டில் வெளிவந்த தமிழ்ப்படங்களில் அதிகமான படங்களில் நடித்துள்ளவர் நகைச்சுவை நடிகர் தங்கவேலுதான். இவர் 10 படங்களில் நடித்திருக்கிறார்.

சென்ற வருடத்தில் 32தமிழ்ப் படங்களும் 18 தமிழாக்கம் செய்யப்பட்டபடங்களும் வெளி வந்தன.

தமிழ்த் திரையுலகின் பிரபல நட்சத்திரங்கள் நடித்துள்ள படங்களின் எண்ணிகை விபரம் வருமாறு:

**நடிகர்கள்:**

| | |
|---|---|
| கே. ஏ. தங்கவேலு | 10 |
| எம். ஆர். ராதா | 9 |
| சிவாஜி கணேசன் | 8 |
| ஜெமினி கணேசன் | 7 |
| எம். என். நம்பியார் | 7 |
| குலதெய்வம் ராஜகோபால் | 7 |
| டி. எஸ. பாலையா | 6 |
| எம். ஜி. ராமச்சந்திரன் | 5 |
| எஸ. எஸ. ராஜேந்திரன் | 4 |
| அசோகன் | 3 |
| பாலாஜி | 3 |
| டி. ஆர். மகாலிங்கம் | 2 |
| பி. எஸ. வீரப்பா | 2 |
| சந்திரபாபு | 2 |
| நாகேஸவரராவ் | 2 |
| பிரேம்நஸீர் | 1 |
| ஆனந்தன் | 1 |

**நடிகைகள்:**

| | |
|---|---|
| சாவித்திரி | 6 |
| தேவிகா | 6 |
| எம். என். ராஜம் | 6 |
| சரோஜாதேவி | 5 |
| ஈ. வி. சரோஜா | 5 |
| சௌகார் ஜானகி | 4 |
| பத்மினி | 3 |
| ராஜசுலோசனா | 5 |
| எல். விஜயலக்ஷ்மி | 3 |
| அஞ்சலிதேவி | 2 |
| விஜயகுமாரி | 2 |
| பண்டரிபாய் | 2 |
| ஜமுனா | 1 |
| வைஜயந்திமாலா | 1 |
| பானுமதி | 1 |

### 'பதினெட்டாம்படி'

சாந்தி புரடக்ஷன்ஸ் என்ற பெயரில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள படத்தயாரிப்பு ஸ்தாபனம் 'பதினெட்டாம் படி' என்னும் படமொன்றைத் தயாரிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்துவருகின்றனர்.

### எம். ஜி. ஆர்— வி. ஆர். ஆர். மோதல்!

'குலதெய்வம்' ராஜகோபாலுக்கும், புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனுக்குமிடையில் பகிரங்கமாகவே 'மோதல்' ஏற்பட்டுள்ளது. 'கோர்ட்டிற்குப் போவேன்' என்று புரட்சி நடிகரும் 'கோர்ட்டிற்கு நானும் வரத்தயார்!' என்று 'குலதெய்வமும்' அறிக்கையும் பதிலறிக்கையும் விட்டுள்ளனர்.

## படக்கம்பனியின் அதிர்ஷ்டப் பெயர்!

சிவாஜி கணேசனின் அதிர்ஷ்டத்தைப் பார்த்தவர்கள் சிலர் அவருடைய பெயரில் 'சிவாஜி' என்பதை எடுத்து தாங்கள் தொடங்கும் ஸ்தாபனத்திற்கு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றும் சிலர் "கணேசன்" என்பதை எடுத்துக் கொண்டார்கள்.

நடிகர் எம். ஆர். சந்தானமும் மோகன் 'ஆர்ட்ஸ' உரிமையாளர் மோகனும் கூட்டாக திரைப்படத் தயாரிப்புக் கம்பனி ஒன்று ஆரம்பித்தனர். ராஜாமணி பிக்சர்ஸ என்ற பெயரில் ஆரம்பித்த இந்த தாபனத்தினர் "பாசமலர்" படத்தை முதலில் தயாரித்தார்கள். பாசமலர் வெள்ளி விழாக் கொண்டாடிய வெற்றிபடம்.

ராஜாமணி என்று பெயர் வைக்கக் காரணம் என்ன தெரியுமா? நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் தாயாரின் பெயர் ராஜாமணி அம்மாள்!

ராஜாமணி பிக்சர்சின் பங்காளிகளில் ஒருவராகவிருந்த நடிகர் எம். ஆர். சந்தானம் இப்பொழுது தனியாக ஒரு திரைப்படக் கம்பனியை ஆரம்பித்துள்ளார்.

அதன்பெயர் கமலா பிக்சர்ஸ! சிவாஜி கணேசனின் மனைவியின் பெயர் கமலா!

### பத்மினி பிக்சர்சின் ஒருமாதப் படம்

'வேங்கையின் மைந்தனை'த் தயாரிப்பதற்கு முன்னர் ஒரே மாதத்தில் ஒரு சமூகப்படத்தைத் தயாரிப்பதற்கு பத்மினி பிக்சர்சார் திட்டமிட்டுள்ளனர். சிவாஜி கணேசன் கதாநாயகனாக நடிப்பார். நகைச்சுவைப்படமான இப்படம் "மரா" எழுதிய ஒரு கதையை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டதாகும்.

### எதிர்காலமுள்ள நடிகை

எதிர்காலமுள்ள நடிகையென்றால் ஏதோ புதுமுகத்தைக் குறிப்பிடுகிறேமென நினைக்கவேண்டாம் அந்த நடிகை யார் தெரியுமா? அஞ்சலிதேவி! ஆச்சர்யமடையாதீர்கள்! ஏற்கெனவே நூறுபடங்களில் நடித்து, பல படங்களில் தற்போது நடித்துவரும் அஞ்சலிதேவி சென்னையில் சமீபத்தில் நடைபெற்ற ஒருவிழாவில் உபராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணுக்கு அறிமுகம் செய்யப்பட்டார். அப்போது டாக்டர் ராதாகிருஷ்ணன் இவ்வளவு அழகாகவும், இளமையாகவும் தோன்றும் அந்த நடிகைக்கு நல்ல எதிர் காலம் இருக்கிறதென்றார்.

### 'ஆஸ்கார்'போட்டிக்கு கப்பலோட்டிய தமிழன்

பத்மினி பிக்சர்ஸார்ஸ தயாரித்த "கப்பலோட்டிய தமிழன்" படத்தை ஆஸ்கார் பரிசுப் போட்டிக்கு அனுப்புமாறு இந்திய அரசாங்கத்துக்கு தென்னிந்திய பிலிம் வர்த்தக சபை சிபாரிசு செய்துள்ளதாகத் தெரிகிறது.

### அஞ்சலி-சாவித்திரி அளித்த நன்கொடை

சென்னை அடையாறு கலாக்ஷேத்திரகட்டிடநிதிக்குநடிகை அஞ்சலிதேவி 20,000 ரூபா நன்கொடை அளித்துள்ளார்.

திருப்பதியிலுள்ள ஸ்ரீவெங்கடேஸ்வர சர்வகலாசாலையிலுள்ள ஏழை மாணவர்களின் நலனுக்காக நடிகை சாவித்திரி 25,000 ரூபாய் நன்கொடை கொடுப்பதாக அறிவித்துள்ளார். சாவித்திரி நடித்த நூறுவது படம் வெளிவரும் பொங்கல் தினத்தன்று இந்த நன்கொடை வழங்கப்படும்.

### 2-வது தயாரிப்பு

'மருதநாட்டு வீரனைத் தயாரித்த கணேஷ்பிரசாத் மூவிசார் சங்களது இரண்டாவது தயாரிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

### பிரயாணம் ஒத்திவைப்பு

இம்மாதம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதாகவிருந்த நடிகர்திலகம் சிவாஜிகணேசன் தமது பிரயாணத் திட்டத்தை மீண்டும் ஒத்திவைத்துள்ளார்.

### தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் உதயகுமார், ஜி. வி. லெட்சுமி நடித்த ஜெய் பவானி.

•

யாழ்ப்பாணம் மனோகரா: எம். ஜி. ஆர்., வீரப்பா நடித்த முல்லைவனம்.

•

சாவகச்சேரி தேவேந்திரா: எம். ஜி. ஆர்., நடித்த தாய் மகளுக்குக் கட்டிய தாலி. (தமிழ்)


விரைவில் வருகிறது!
சினிமாஸ் திரைகளுக்கு



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, என். எம். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்
நடித்த
ராஜாமணி பிக்சர்ஸ்
பாசமலர்
திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பிம்சிங்

விரைவில் எதிர்பாருங்கள்!
மனோஹர், வீரப்பா, தங்கவேலு, ராஜசுலோசனா
நடித்த
கைதி கண்ணாயிரம்

கிங்ஸ்லி (கொழும்பு) மாலை 6, இரவு 9-30
சாந்தாராவ் நடிக்கும்
ஜெயவீரன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, இரவு 9-30க்கும்
ஜி. வி. லெட்சுமி, உதயகுமார்
நடித்த
ஜெய் பவானி

மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30
ஸ்ரீராம், வீரப்பா நடித்த
முல்லைவனம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.